THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 23rd September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Panchayat President Election

* 16 *S.N.Q.*—SRI P. S. SANTHANAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that the election of the President of the Isukkazhikatteri Village Panchayat Board, Tiruvannamalai taluk, was not held in the proper manner on 6th August 1958; and

(*b*) if so, the action taken against the Presiding Officer and village officer concerned?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) & (*b*) A petition has been received by the Government in the matter. Complaints have been made against the Presiding Officer only and not against the village officer. The matter is under investigation.

SRI P. S. SANTHANAM: On a point of order, Sir, அங்கத்தினர் போடக்கூடிய கேள்விகள் தமிழில் இருப்பதால் ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்களுக்கு அமைச்சர் அவர்கள் தமிழில் பதில் சொல்ல வேண்டியது.

MR. SPEAKER: It is not a point of order. உப கேள்விகள் இருந்தால் கேட்கலாம்.

SRI M. JAGANNATHAN: What is the present position? May I know whether election to that panchayat has since been held?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The matter is under investigation. We have just asked for a report.

SRI S. M. ANNAMALAI: இந்த ஊரில் தாழ்த்தப்பட்ட மெம்பர் ஒருவர் பிரசிடெண்ட்டாக வரக்கூடாதென்பதற்காக இவ்வளவு கலவரம் ஏற பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கார் உடனடியாக தலையிட்டு அதில் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பி நல்ல முறையில் பிரசிடெண்ட்டை தேர்ந் தெடுக்க முயற்சி செய்வார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: தாழ்த்தப் பட்ட மெம்பர் ஒருவர் வரக்கூடாதென்பதின் காரணமாக கலவரங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படித்தான் அங்கிருந்து வந்த ஒரு மனுவிலும் எழுதியிருந்தது. எவ்வாறு தவறு ஏற்பட்டது என்பதுபற்றி கவனிக்க ஒரு ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR: தவறுகள் ஏற்பட்டிருந்தால் அவைகளின்பேரில் வியாஜ்யம் தொடர வசதி செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுப்பதை சர்க்கார் கைவிடுமா?

[23rd September 1958

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தவறுகளை திருத்த முடியுமானால் திருத்தலாம். இல்லாவிடில் கோர்ட்டுக்கு போகலாம்.

SRI S. M. ANNAMALAI : ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கொடுத்த கம்ப்ளெய்ன்ட் தவறானது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆகவே. . .

MR. SPEAKER : யாரால் நிரூபிக்கப்பட்டது என்று அங்கத்தினர் அவர்கள் சொல்ல முடியுமா ? நிரூபிக்கப்பட்டுவிட்டது என்று இந்த சபையில் எப்படி சொல்லலாம் ?

SRI S. M. ANNAMALAI : போலீஸ் நடவடிக்கைகள் எடுத்து விசாரித்ததில் அது தவறான கம்ப்ளெயின்ட் என்று சொல்லிவிட்டார்கள்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : போலீசில் இருந்து ஒரு புகாரும் வரவில்லை. எந்த ரிப்போர்ட்டும் வரவில்லை.

SRI P. S. SANTHANAM : இந்த தேர்தலில் நடந்த ஒரு தில்லு முல்லானதுபற்றி அங்கு நடந்த கலவரத்தைப்பற்றி கிராம உத்தியோகஸ்தர்கள் விசாரிக்கப்பட்டார்களா ?

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார், சபையில் " தில்லுமுல்லு " என்ற வார்த்தையை உபயோகிக்கலாமா ?

MR. SPEAKER: அது பார்லிமெண்டரியில்லை என்று சொல்ல முடியாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : It has no significance at all.

Radio sets

* 431 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தேசிய விஸ்தரிப்புத் திட்ட பிரதேசங்களிலே எத்தனை கிராமங்களுக்கு State Broadcasting Department மூலமாக ரேடியோ செட்டுகள் சப்ளை செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 326.

SRI P. G. MANICKAM : கிராமங்களில் எந்தெந்த ஸ்தாபனங்களுக்கு இந்த ரேடியோ செட்கள் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட நபர்கள் விரும்பினால் அவர்களுக்கும் வழங்க திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்ட நபர்கள் வேண்டுமானால் ரேடியோ செட்களை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

SRI A. VEDARATHNAM : இந்த ரேடியோ செட்கள் எங்கிருந்து தருவிக்கப்படுகிறது ? நம் மாநிலத்தில் ரேடியோ செட்கள் செய்து கொண்டிருந்தார்களே. அது என்னவாயிற்று ? இங்கு செய்யப்படும் செட்களுக்கு அரசாங்கம் சலுகை அளித்து அவைகளை கிராமங்களில் அமைக்க முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது " டைரக்டர் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அன்ட் டிஸ்போஸல்ஸ் " மூலம்தான் செட்டுகள் வாங்கப்படுகிறது. நம் செட்களையும் அவர்களே வாங்கி வினியோகிக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் செய்யப்பட்டு வருகிற செட்களும் இன்று மத்திய சர்க்காரால் வாங்கப்பட்டு அவைகளும் வழங்கப்பட்டுவருகிறது.

23rd September 1958]

Sri J. MATHA GOWDER : கோயம்புத்தூரில் இருக்கிற ஜி.டி. நாயுடு அவர்கள் செய்யும் செட்களின் விலை மிகவும் குறைவாக இருப்பதால் அவைகளை வாங்கி கிராமங்களுக்கு கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுவரையில் வாயளவில் தான் அந்தத் திட்டம் நிறைவேறியிருக்கிறதே தவிர, இன்னும் நாம் எல்லோரும் வாங்கும் அளவிற்கு அது முன்னேறவில்லை என்பது தான் நான் தெரிந்த வரையில்.

Sri R. KRISHNASAMI NAIDU : தேசிய விஸ்தரிப்புத்திட்ட பிரதேசங்களில் வாங்கி கொடுக்கப்படும் ரேடியோ செட்கள், மின்சாரம் இருக்கக்கூடிய பகுதிகளில் மெயின் செட்கள் என்று வைக்கப்படுகிறது. மின்சாரமில்லாத பகுதிகளில் பாட்ரி செட்டுகள் வைக்கப்படுகிறது. பாட்டரி செட்கள் என்றால், வருடம் ஒன்றுக்கு 90 ரூபாய் பஞ்சாயத்திலிருந்தோ, பொதுமக்களிடமிருந்தோ அரசாங்கம் வாங்குகிறது, அதை நிர்வகிக்க. ஆனால் மின்சாரத்தில் இயங்கும் ரேடியோ செட்கள் உள்ள இடங்களில் ஆண்டுக்கு 20 ரூபாய் கூட செலவு ஏற்படுவதில்லை. அப்படி இருந்தும் மெயின் செட்கள் வைக்கும் இடங்களில்கூட 90 ரூபாய் வசூலிக்கிறார்கள். இது பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. ஆகவே, மெயின் செட்கள் உள்ள இடங்களில் இந்தச் செலவை மட்டும் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதைப்பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : தேசிய விஸ்தரிப்புத்திட்ட பிரதேசங்களில் உபயோகப்படுத்தக்கூடிய ரேடியோக்களில் ஒரு குறிப்பிட்ட ஸ்டேஷன்களைத்தான் வைக்கவேண்டுமென்ற நிபந்தனை ஏதாவது உண்டா ? அப்படியிருந்தால், அதற்கு காரணம் என்ன ? அது நீக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆமாம். நிபந்தனையுண்டு. ஏனெனில், இது, வெறும் பாட்டுகள் கேட்பதற்காக மட்டும் அல்ல, ரேடியோ நிலையங்கள். அதன் மூலம் பல முக்கியமான விஷயங்களை கிராம மக்களுக்கு அறிவிக்க வேண்டி இருக்கின்றன. அவைகளை மக்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இஷ்டம் போல் அவரவர்கள் நிகழ்ச்சிகளை மாற்றி வைத்துக்கொண்டிருந்தால் முக்கியமான நிகழ்ச்சிகளையெல்லாம் கிராம மக்கள் கேட்க வசதியில்லாமல் போய்விடும். ஆகவே, சில முக்கியமான, திருச்சி, மதராஸ் போன்ற ஸ்டேஷன்களை மட்டும்தான் கேட்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(Sri A. A. Rasheed and Sri K. Vinayakam were seen raising their hands.)

Mr. SPEAKER : If more Members want to put supplementaries on this question, I have no objection. But the result will be that time will not be available to allow the Members to put supplementaries on the subsequent questions. I want to make that clear even now. Later, it should not be complained, just as some hon. Member did yesterday, that the Speaker did not give sufficient opportunities for putting supplementaries on the remaining questions. About 75 questions are included in the list of questions everyday for being answered. At the same time, if the hon. Members want to put ten supplementary questions on each question, it will be mathematically impossible to allow them. I leave it to the

[23rd September 1958

hon. Members. If they want to put a large number of supplementaries on every question, I am afraid about 25 questions or so will not be answered. I leave the choice to the hon. Members. Now, Mr. Rasheed may put his supplementary question.

SRI A. A. RASHEED : Have the Government made any representation to the Union Government regarding the class of music that is broadcast from Akashvani?

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that most of the sets that are installed in these centres go out of order and do not work for want of a mechanic who could turn up in time and rectify the defects immediately?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think that the hon. Member is justified in making such a sweeping remark. As a matter of fact, there are servicing facilities for all these sets.

Physical Education

* 432 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount spent on Physical Education and Youth culture in 1957–58; and

(*b*) the number of institutions receiving aid from the Government for Physical Education and the number of instructors and lecturers empoyed therein?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 1,82,987, Sir.

(*b*) Number of institutions receiving aid is 3 and the number of instructors and lecturers employed is 2 and 18 respectively.

SRI M. JAGANNATHAN : Sir, the proverb says, " There is a sound mind in a sound body ". Physical development is as much important as mental development. I find that the . . .

MR. SPEAKER : The hon. Member is making a speech.

SRI M. JAGANNATHAN : I am putting a question, Sir.

MR. SPEAKER : No, he is not. The hon. Member is making a speech.

SRI M. JAGANNATHAN : Others have also done it. Let me finish . . .

MR. SPEAKER : The hon. Member must put it in the form of a question and should not make a speech.

SRI M. JAGANNATHAN : I am putting a question, Sir.

MR. SPEAKER : The hon. Member is not putting a question. That is my difficulty.

23rd September 1958]

SRI M. JAGANNATHAN : Please listen to me, Sir . . .

MR. SPEAKER : I am sorry. This is not the occasion for hon. Members to make speeches or for me to listen to them. This is question-hour, when hon. Members will have to put short questions which will be answered by the Ministers. If the hon. Member persists in making speeches, I will not call him to put any supplementary at all. Now, let him put a short question.

SRI M. JAGANNATHAN : In view of the fact that the amount allotted for the promotion of physical culture and physical development in our State is quite a paltry sum and is most incommensurate with the needs of the State, will the Government come forward to allot more funds in order to promote physical culture?

THE HON. SRI C. SUBRAMANIAM : This amount is only for the purpose of helping training institutions and colleges which are training Physical Instructors. So, if we take into account the various amounts spent on physical education in schools and colleges and on various other things, the amount will really be very considerable.

9-10 a.m.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், இந்த உடற் பயிற்சி கல்வியோடு நமது வீர தமிழர் பரம்பரையிலிருந்து வந்த சிலம்பம், குஸ்தி போன்ற விளையாட்டுகளையும் இதில் சேர்த்து பயிற்சி கொடுப் பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நமது நாட்டு விளையாட்டு களையும் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற சிலம்பம், குஸ்தி போன்ற வைகள் எவ்வளவு தூரத்திற்கு சொல்லிக்கொடுக்கிறார்கள் என்பது எனக்கு இப்போது தெரியாது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வாலிபர்களுக்கு இவ்வளவு தொகை செலவு செய்திருப்பதாக சொன்னார்கள். அப்படி யானால் இதில் வாலிபிகளுக்கு எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது ? (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : புதிய சொற்களை தொகு க்கும் கமிட்டியில் கனம் அங்கத்தினர் அவர்களை நியமிக்கலாம் என்று நம்புகிறேன். பெண்களுக்கு இதில் எவ்வளவு செலவிடப்படுகிறது என்கிற விவரம் என்னிடமில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், இந்த உடற்பயிற்சி நாட்டிலுள்ள எல்லோருக்கும் தெரிந்திருக்கவேண்டும் என்ற முறை யில், கிராமங்களிலுள்ளவர்களையும் நல்ல உடல் நலத்தோடு இருப்பத ற்கு செய்யும் விதத்தில் எல்லா கிராமங்களிலும் இந்த பயிற்சி கொடுப் பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது பள்ளிக்கூடங் களில்தான் இந்த தேக பயிற்சி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. இவைகளை சொல்லிக்கொடுப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. அந்த ஆசிரியர்களை தயாராக்குவதற்குத்தான் இப்போது பயிற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

SRI A. VEDARATHNAM : இந்த உடற்பயிற்சியில் ஆசன பயிற்சி களும் போதிக்கப்படுகின்றனவா ? இவற்றைப்பற்றி போதிக்கும் ஆசிரியர் களுக்கு ஆசனப் பயிற்சி தெரியுமா ? அவ்விதம் இல்லையானால் இந்த ஆசனப்பயிற்சியை அபிவிருத்திச் செய்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது ஆசனப்பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆசிரியர்களும் அமர்த்தப் பட்டிருக்கின்றனர்.

SRI P. G. MANICKAM: ஸார், இந்த பயிற்சி பெற்றவர்களை லோயர் கிரேட் என்றும், ஹையர் கிரேட் என்றும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருக்கிறது. இந்த இரண்டு கிரேடுகளையும் மாற்றி ஒரே கிரேடாக வைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவர்களுக்கு ஒரு கிரேடும், டிக்ரி பெற்றவர்களுக்கு டிப்ளோமா என்று ஒரு பிரிவும் இருக்கவேண்டியது அவசியம் என்று கருதிதான் இவ்விதம் இரண்டு பிரிவுகள் வைக்கப்பட்டிருக்கிறது.

District Board Teachers, Madurai

*433 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா போர்டில் 1954 முதல் 1957 அக்டோபர் முடிய எத்தனை ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள் ?

(ஆ) 1957 ஜனவரி முதல் அக்டோபர் முடிய எத்தனை ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள் ?

(இ) கலெக்டரிடம் சார்ஜ் கொடுக்கும் முதல் மாதத்தில் எத்தனை ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள் ?

(ஈ) என்ன காரணத்திற்காக மாற்றப்பட்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) to (*d*) A statement [a] is placed on the table of the House.

SRI N. R. THIAGARAJAN: அரசியல் காரணங்களுக்காக தங்களுக்கு சாதகமாக இல்லை என்ற காரணத்தின் பேரில் இவ்விதம் மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. இதற்காக சுமார் 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு ஏற்பட்டதும் வாஸ்தவம் என்று நினைக்கிறேன். இந்த ரூபாய் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப்பற்றி புகார்கள் வந்தன. இதன் பேரில் விசாரணை செய்ததில் புகாருக்கு ஆதாரங்கள் இருந்ததின் பேரில் இவ்விதம் மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நமது ஜனநாயக முறையில் இம்மாதிரி நஷ்டங்களுக்கும் தயாராகத்தான் இருக்கவேண்டும். நாம் இப்போது பஞ்சாயத் யூனியன், பஞ்சாயத் இவைகளைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். இவைகளையும் அப்போது மனதில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. R. VISWANATHAN: ஸார், இம்மாதிரியான ஆசிரியர்களை மாற்றும்போது அரசாங்கத்தின கொள்கையை எல்லா இடங்களிலும் அனுசரிப்பதாக தெரியவில்லை. ஆகவே எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரே விதமாக அரசாங்கத்தின் கொள்கையை அனுசரிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் விதிகள் போடுவது ஒன்று, ஆனால் அனுசரிப்பது இன்னொன்று. கனம் அங்கத்தினர் தியாகராஜன் அவர்கள் கேட்டிருப்பது இவ்விதம் விதிகளை மீறி இவ்விதம் மாற்றப்பட்டிருப்பது சரியா என்பது. இம்மாதிரி அந்தந்த டிஸ்ட்ரிக்ட் போர்டு செய்யும் பொழுது அந்த டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்டின் மீது நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கு சிரமமாயிருக்கிறது.

---

[a] Printed as Appendix I on page 575 infra.

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரியான பெருவாரியான மாறுதல்கள் நடந்து வருவதால் இதைப்பற்றி புகார்கள் வருகின்றன. ஆகவே இம்மாதிரியாக அளவு கடந்த முறையில் மாறுதல் நடவாதவாறு எதிர்காலத்தில் சர்க்கார் ஒரு நடைமுறையை கையாளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது நாம் ஜில்லா போர்டுகளின் முடிவு காலத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இதைப்பற்றி பேசவும் விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI S. LAZAR : ஸார், இம்மாதிரி தவறிழைக்கின்றவர்களை மாற்றுவதற்கு பதிலாக தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு நடைமுறையை சர்க்கார் கையாளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சாதாரணமாக ஆசிரியர்கள் பெரிய குற்றம் செய்தால்தான் தண்டிக்க முடியும். சிறிய குற்றங்களுக்கு எல்லாம் தண்டிக்க முடியாது. இம்மாதிரி இடமாற்றுவதே போதுமான தண்டனையாக ஆகிவிடுகிறது. ஆனால் நாம் இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டையே மாற்றுவதற்கு ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இதைப்பற்றி கூடுதலாக கவனிக்கவேண்டிய அவசியமில்லை.

SRI N. R. THIAGARAJAN : இப்போது அனுவசியமாக இடமாற்றம் செய்ததை மாற்றி பழைய இடத்திற்கே திரும்பி மாற்றிக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்படி செய்தால் இன்னும் ஒரு தடவை உபத்திரவம் கொடுப்பது போலாகும். ஆகவே இதைப்பற்றி அவசியம் என்றிருக்குமானால் அங்கங்கு இருக்கக்கூடிய ஸ்பெஷல் ஆபீஸர்கள் மாற்றம் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

Medical Colleges

* 434 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ய வைத்தியக் கல்லூரிகளில் சென்ற பத்தாண்டுகளில் இன்டர்மீடியட்டில் 3-வது வகுப்பில் தேரிய மாணவர்கள் எத்தனை பேர் வைத்தியப்படிப்புக்கு அனுமதிக்கப்பட்டார்கள் ?

(ஆ) அதில் எத்தனை பேர் பத்தாண்டுகளுக்கு மேலாக வைத்தியக் கல்லூரிகளில் படித்துக்கொண்டு இருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) As the selections were made on the basis of the marks obtained by the candidates in Part III Optionals of the Intermediate Examination without reference to the classes obtained in the examination, the information is not available.

SRI N. R. THIAGARAJAN : ஸார், எனக்கு தெரிந்த அளவில் எங்கள் ஊர்வாசிகளில் சிலர் 10, 12, 16 வருடங்கள் கூட இந்த வைத்தியக் கல்லூரியில் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் ஒரு நிவர்த்தி மார்க்கம் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவ்வளவு நாட்களாக அங்கே படித்துக்கொண்டிருப்பது, ஒருவேளை பாண்டிய நாட்டின் பண்போ என்னவோ தெரியவில்லை. (சிரிப்பு.)

SRI K. VINAYAKAM : Are not students admitted to the medical college, if they have secured the minimum marks necessary for admission? Is it a crime to get a third-class and go into the medical college, if the boy deserves admission on the basis of the marks in his optionals?

MR. SPEAKER : How does it arise out of the main question? The Government say they have no information. Anyway, I leave it to the Hon. Minister to answer, if he is willing.

SRI K. VINAYAKAM : Do not the Government fix the minimum marks to be obtained by the students to become eligible for admission, and if such marks are obtained, even though they secure only a third-class, are they not eligible to get into the medical college?

THE HON. SRI M. A. MANICKAVELU : They are quite eligible. The minimum fixed is in respect of the optionals. It must be 45 per cent.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு பேர் இவ்விதம் வைத்திய கல்லூரியில் வருஷக் கணக்கில் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, பாண்டிய நாட்டு மக்களின் பண்பே இந்த முறையில்தான் இருக்குமா என்று சந்தேகப்படும்படியாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த முறையில் பாண்டிய நாட்டு மக்களின் பண்பு இல்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த கேள்வியின் பதில் அவருக்குரியதாகும்.

SRI A. A. RASHEED : Is it not a fact that the more the number of years a medical student spends in the hospital and the college, the better and more efficient a doctor he later on emerbes? (Laughter.)

THE HON. SRI M. A. MANICKAVELU : That reminds me of a saying by some one that the longer the period a student fails from the infant class onwards—two years or three years in each class—the deeper is the foundation laid. (Laughter.)

Drinking water

* 435 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகர் மேலக்கால் குடிதண்ணீர் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

(ஆ) அதற்கு எவ்வளவு செலவாகும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The first and second stages of the Madurai Melakkal water-supply improvement schemes are expected to be completed by the end of 1960. The third and fourth stages of the scheme may be completed by the end of 1966.

(*b*) The approximate total cost of the schemes works out to Rupees one hundred and thirty-one lakhs.

Hospitals

*436 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் ஆஸ்பத்திரிகள் (ஜில்லாவாரியாக) எத்தனை ?

(ஆ) 1951 முதல் 1957 வரை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு கிராண்ட் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் கொடுக்கப்பட்டது ?

(இ) 1952 முதல் 1957 வருடத்திற்குள் இடையில் கொடுத்துக் கொண்டிருந்த கிராண்டை எந்தெந்த ஆஸ்பத்திரிகளுக்கு ஜில்லாவாரியாக நிறுத்தப்பட்டது ?

(ஈ) அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) to (*d*) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இவ்விதமாக லட்சக்கணக்கான ரூபாய்களை தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆஸ்பத்திரிகளுக்கு கிராண்டாக கொடுத்தும்கூட ஒரு சில ஆஸ்பத்திரிகளில் எந்த ஜாதியார் அந்த ஆஸ்பத்திரியை நடத்துகிறார்களோ அந்த ஜாதியார்களுக்கு மாத்திரம் தான் அந்த ஆஸ்பத்திரிகளிலும் காலேஜ்களிலும் இடம் கொடுக்கிறார்கள். ஆகவே ஜாதி மத இன பேத வேறுபாடில்லாமல் எல்லோருக்கும் இடம் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் எதை மனதில் வைத்துககொண்டு இவ்விதம் சொல்லுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த வேலூர் கிறிஸ்டியன் காலேஜ்க்கு இப்போது கிராண்டு கொடுப்பதில்லை.

SRI M. S. SELVARAJAN : இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் லிஸ்டிலிருந்து தனிப்பட்டவர்களால் நடத்தும் சில ஆஸ்பத்திரிகளுக்கு கிராண்ட் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அவர்கள் அரசாங கத்தினிடத்தில் மனு செய்து கோராதது குற்றமா ? அல்லது அவர்களுக்கு வெளியிலிருந்து பண உதவி கிடைக்கிறது என்ற காரணத்திற்காக அவர் களுக்கு கொடுக்கப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன் ? வெளி நாட்டிலிருந்து உதவி பெறாத ஸ்தாபனங்கள் அரசாங்க உதவி கோரி மனுச் செய்திருந்தால் அம் மனுக்கள் அனுதாபத்துடன் கவனிக்கப் பட்டிருக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமானவரை எங்கெல்லாம் தனிப்பட்டவர்களுக்கு கொடுக்க முடியுமோ இந்த இடங்களில் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், அப்படி தனியார் நடத்தக்கூடிய ஆஸ்பத்திரிகளில் கவர்ண்மெண்டிலிருந்து கிராண்டு வாங்கிக் கொண்டு அதை ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்களுக்காக மட்டும் வைத்துக் கொள்கிறார்கள் என்ற புகார்கள் வந்திருக்கின்றதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி புகார் இல்லை. மற்ற எல்லோரையும் அங்கு சேர்த்துக் கொள்கிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், வேலூர் கிறிஸ்டியன் காலேஜுக்கு இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் சொன்னார்கள் அப்படி யானால் ஜாதி மத பேதமில்லாமல் அங்கு எல்லோரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா ? இத்தகைய பாகுபாடு நடக்குமானால் அம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் கூடியமட்டில் தொகை தராமல் இருக்க முயற்சிப்பார்களா ?

---

[a] Printed as Appendix II on pages 575–582 infra.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதனுல் தான் இப்போது கொடுக்கப்படும் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் காலேஜ் நிர்வாகம் அவர்கள் பணச் செலவிலேயே செய்து வருகிருர்கள்.

Pathways to Harijan Colonies

* 437 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the starred question No. 265 on 10th March 1958 the further action taken so far to provide pathways to Harijan colonies referred to therein?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

SRI M. JAGANNATHAN : ஐயா, மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையிலே ஒளிந்தியாம்பட்டு கிராமத்தில் ரோடு போடும் விஷயத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதாகவும் ரோடை ஹரிஜனங்களே போட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோடு போட்டுக்கொள்வதற்கு சர்க்கார் பண உதவி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

Palar waters

* 438*Q.*—SRI A. A. RASHEED : AND SRI S. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have made a representation to the Union Government regarding the appointment of a Commission to go into the question of sharing the waters of Palar between Madras and Mysore?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir. In March 1955, this Government addressed the Government of India to constitute a Council under Article 263 of the Constitution of India to enquire into the Palar water dispute between Madras and Mysore and suggest suitable remedies. A committee consisting of the representatives of the Government of India and the Governments of Madras and Mysore discussed the question and arrived at certain conclusions. The question was also discussed with the Union Minister for Irrigation and Power. The Government do not wish to pursue the matter further for the time being.

* 439 *Q.*—SRI M. P. SARATHI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) டெல்லியில் நீர்பாசனம் பற்றிய மகாநாட்டில் பாலாறு தண்ணீர் பற்றிய பிரச்னை எழுப்பப்பட்டதா ?

(ஆ) அதுபற்றி தற்போது எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have examined the findings of the Committee consisting of the representatives of the Government of India and the Governments of Madras and Mysore that enquired

[a] Printed as Appendix III on page 583 infra.

23rd September 1958]

into the alleged violations by the Mysore Government of the 1892 Agreement between Madras and Mysore, in regard to sharing of Palar waters. The question was also discussed with the Union Minister for Irrigation and Power. The Government do not wish to pursue the matter further for the time being.

SRI A. A. RASHEED : May I know why the Government do not want to pursue the matter further? What is the reason for not pursuing the matter?

THE HON. SRI P. KAKKAN : The Deputy Minister to the Government of India said that if they failed to reach a settlement by these methods they had to take recourse to Inter-State Water Dispute Act under which one of the parties to the dispute should bring the matter formally to the notice of the Government of India. Further the Union Minister for Irrigation and Power promised to help by using his good offices to bring about an understanding between the two Governments when he goes over to the South.

SRI N. K. PALANISAMI : ஸார், கமிஷனும், சர்க்காரும் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள் என்று சொன்னார்கள். அந்த முடிவு என்ன ?

THE HON. SRI P. KAKKAN : முடிவுக்கு வந்தது மைசூர் அரசாங்கம் அதிகத் தண்ணீர் எடுக்கவில்லை என்பது. இருந்தாலும் இரு அரசாங்கங்களும் இந்தப் பிரச்னையை எவ்வாறு தீர்த்துக்கொள்ளவேண்டு மென்பதைப்பற்றி சீப் என்ஜினீயர்களிடம் கலந்து பேசி முடிவுக்கு வர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சீப் என்ஜினீயர்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. பின்னல் மத்திய சர்க்காரின் இர்ரிகேஷன், பவர் மந்திரி அவர்கள் வரும்போது இரு சர்க்காரிடத்திலும் பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள். ஆகையால் இதை மேற்கொண்டு எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்று எண்ணுகிறேம்.

SRI K. S. G. HAJA SHERIFF : **Arising out of this question, may I know from the Hon. Minister whether any discussion has been started with the Andhra Government for linking Godavari with Cauveri and if so what is the present position ?**

MR. SPEAKER : It is a separate question. This question relates to the Palar. How can the hon. Member bring in Godavari into this question?

SRI S. RAMALINGA PADAYACHI : ஸார், டல சமயங்களில் கங்கையைக் காவேரியுடன் இணைத்து எங்கும் நீர்ப்பாசன வசதி செய்யலாம் என்று என்ஜினீயர்கள் சொல்லுகிறார்களே இதை யூனியன் மாராமத்து மந்திரி அவர்களும், ராஜ்ய மாராமத்து மந்திரி அவர்களும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்களா, ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா ?

MR. SPEAKER : எதைப்பற்றி ?

AN HON. MEMBER : கங்கையைப்பற்றி.

MR. SPEAKER : இதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : பாலாறு தண்ணீரைப்பற்றி பல நாட்களாக பொது மக்களும் அதை நம்பி வாழும் விவசாயிகளும். தண்ணீர் கிடைக்குமென்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நம் அரசாங்கத்திற்கும்

[23rd September 1958

மைசூர் அரசாங்கத்திற்குமிடையே உள்ள ஒப்பந்தம் என்ன ? அதன் விளைவாக எவ்வளவு தண்ணீர் வரவேண்டும் ? அதை எப்போது விடுவார்கள் ? அல்லது இப்படியே இருக்க வேண்டுமா ? மத்திய சர்க்கார் இதிலே தலையிட்டு ஏதேனும் செய்யவில்லையா ? இதையெல்லாம் குறித்து அரசாங்கம் ஒரு சிறிய அறிக்கை ஒன்றைத் தயார் செய்து வைத்தால் நிலைமை என்னவென்பது தெரியும். இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தப் பிரச்னையின் மீது முடிவு காண பாராளுமன்ற அங்கத்தினர்களும், எலக்டிரிசிடி மந்திரியும் நானும் டில்லியில் நடைபெற்ற கான்பரென்சில் கலந்து கொண்டோம். அங்கு விவாதம் செய்யப்பட்டது. இருந்தாலும், இரு சர்க்காரிடத்திலே சமரசமாகப் பேசி முடிவுகாண இர்ரிகேஷன் மந்திரி அவர்கள் தென்னாட்டுக்கு வரும்போது, இது சம்பந்தமாகப் பேசுவதாகச் சொன்னார்கள்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் ஹாஜா ஷெரீப் அவர்களும் ராமலிங்க படையாச்சி அவர்களும் போட்ட கேள்விகள் இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை அதற்குத் தனி கேள்விகள் போடவேண்டும்.

Second Five-Year Plan

* 440 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to State—

(*a*) whether any cut is to be effected in the amount allotted for this State under the Second Five-Year Plan as a result of the discussion in the National Development Council held in May 1958; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) At its meeting on the 3rd and 4th May 1958, the National Development Council considered the question of the total outlay to be undertaken in the public sector during the period of the Second Plan in the light of the progress made during the first two years and the steps taken to raise additional resources. It was decided that the Plan in the public sector should be divided into two parts, viz., Part A involving a total outlay of Rs. 4,500 crores, and Part B a total outlay of Rs. 300 crores. The lists of projects to be included in the two parts of the Plan are to be settled after discussion between the Planning Commission and the Central and State Governments. The Planning Commission is now engaged in discussions with the Central Ministries and is expected to address State Governments shortly. Since then we have been addressed and we have had discussions with the Planning Commission and there is not likely to be any cut in the Plan.

* 441 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the decisions taken by the National Development Council at its meeting during May 1958, concerning the Second Five-Year Plan targets for our State; and

(*b*) whether any reduction is proposed in the financial targets and if so, to what extent?

23rd September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAN : The attention of the hon. Member is invited to the answer given to Starred Question No. 440 put by the hon. Member, Sri N. K. Palanisami.

SRI N. K. PALANISAMI : 4,800 கோடியிலிருந்து 4,500 கோடியாகக் குறைந்துவிட்டதன் காரணமாக சோஷல் வெல்பேர் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இம்மாகாணத்தில் இந்த சோஷல் வெல் பேர் ஸ்கீமெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் கேள்வி கேட்ட பிறகு பதில் என்ன சொன்னேன் என்பதைப் பார்த்துக் கேட்டால் நலமாக இருக்கும். நான் சொன்னேன், நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் எந்த விதமான 'கட்டும்' கிடையாது. 152 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் அப்படியே நிறைவேறப் போகின்றன. அதிகமாக ஆனாலும் ஆகலாம், ஆனால் குறையாது என்று நம்புகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : ஆங்காங்கு நண்பர்கள் இந்த சர்க்கார் சுகமில்லை, இது சரியாக வேலை செய்கிறதில்லை என்று சொல்வதால் பொது மக்களுடைய ஒத்துழைப்புக் குறைவதால், திட்டங்கள் நிறைவேறுவது தடைபடுகிறது என்று சொல்லப்படுவதில் ஆதாரம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே இருக்கக்கூடிய சூழ் நிலையில்தான் வேலை செய்யவேண்டும். திட்டம் சரியாக இல்லை, சரியாக நிறைவேறவில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதால் என்ன கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அந்தச் சூழ்நிலையில் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை. அப்படியே நிறைவேற்றிக் கொண்டும் வருகிறது.

SRI K. R. NALLASIVAM : உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிறோம். நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்திக்கான தொகையை அதிகப்படுத்தி திட்டத்தை மாற்ற சர்க்கார் முயற்சிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னப் பிரகாரம் 152 கோடி அளவிற்கு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அதை எந்த அளவுக்கு மாற்றியமைக்க வேண்டுமென்பது இங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்தது. இப்போது இருக்கக்கூடிய நிலைமையில், விவசாயத்திற்கு எத்தனை ரூபாய் ஒதுக்குகிறோமோ அத்தனை ரூபாய் செலவழிக்க முடியாது என்று தெரிகிறது. வேறு இனங்களுக்கு மாற்ற வேண்டியிருக்கிறது. எடுத்துக்கொள்ளக் கூடிய எல்லாத் திட்டங்களுக்கும் வேண்டிய நிதி இருக்கிறது.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : மத்திய சோஷல் வெல்பேர் போர்டு கொடுக்கிற தொகையும் இந்த 152 கோடி ரூபாயிலே அடங்கியிருக்கிறதா ? அடங்கியிருந்தால் இதிலே நமக்கு எவ்வளவு விகிதாசாரம் கிடைக்கவேண்டுமோ, அதை முழுவதும் செலவழிக்க சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தத் தொகை முழுவதும் சேரவில்லை. மத்திய சர்க்கார் நேரடியாகக் செலவழிக்கக்கூடிய திட்டங்கள் இதிலே சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : அபிவிருத்தித் திட்டங்களை நிறை வேற்றுவதற்காக வேண்டி சர்க்கார் மற்ற மற்ற கட்சிகளுடைய உத வியை நாடியதுண்டா ? அப்படி நாடியிருந்தால் எந்தெந்த வகையிலே நாடியிருக்கிறது ? ஒன்றுபட்டு இயங்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டு மானால், தவருகப் பிரசாரம் செய்கிறார்கள் என்ற கேள்வி எப்படி எழும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a suggestion for action. As a matter of fact, this Government have taken into confidence the Opposition parties also in various matters. As a matter of fact the entire matter has been discussed in this House where all the parties are represented.

SRI A. GOVINDASAMI : இப்பொழுது ஒதுக்கியிருக்கிற 152 கோடி ரூபாய் போதாது என்று பிளானிங் கமிஷனிலே நமது நிதி அமைச்சர் அவர்கள் வாதாடியது உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எப்பொழுதும் நாம் போதும் என்று சொல்வோமேயானால் அது நம்முடைய முன்னேற்றத்திற்கு அறிகுறியில்லை. போதாது என்கிற நிலையில் இருக்கும்பொழுதுதான் வேண்டிய அளவு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். இந்த 152 கோடி ரூபாய் செலவழிக்க முடியவில்லை என்றால் அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம்.

SRI S. RAMALINGA PADAYACHI : 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்பட்டது. கடன் கொடுக்கும்பொழுது வட்டி இல்லை என்று சொல்லப்பட்டது. வசூலிக்கும்போது வட்டியுடன் வசூலிக்கப் பட்டது. இடையிலே அரசாங்கம் ஏதாவது மாறுதல் செய்தது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : மூல கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமே யில்லை. மூல கேள்வி தேசீய அபிவிருத்தி கௌன்சிலைப்பற்றியது.

SRI T. VELUCHAMI : நமது ராஜ்யத்திலே செமெண்ட் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க தனியாரை நாம் எதிர்பார்க்கிறோம். நாம் அனுஷ்டிக்கும் கொள்கை சோஷலிஸக் கொள்கையாக இருப்பதனால், எந்தத் தொழிலையும் எந்த நேரத்திலும் சர்க்கார் தேசீயமயமாக்கு வார்களோ என்று அவர்கள் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கத் தயங்குகிறார் கள். இந்த நிலைமை இந்த அபிவிருத்திக் கவுன்சிலிலே விவாதிக்கப் பட்டதா ? ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் அம்மாதிரி தொழில்களை " நேஷனலைஸ் " செய்யமாட்டோம் என்பதுபோன்ற பரிகாரங்கள்பற்றி யோசனை செய்யப்பட்டதா ?

MR. SPEAKER : மூல கேள்வியிலிருந்து இந்த உப கேள்வி எழ வில்லையே.

SRI T. SAMPATH : அமைச்சர் அவர்களின் பதிலில் விவசாயத் திற்காக ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவு செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குக் காரணம் போதிய அளவு பயிற்சி பெற்ற ஆட்கள் நம்மிடத்தில் இல்லை. ஆகை யால் சிறிது சிறிதாகத்தான் நாம் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. ஆகையால் எந்த அளவுக்கு செலவு செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செலவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Colleges for Women

* 442 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கவர்ன்மென்டாலும், தனிப்பட்டவர்களாலும் நடத்தப்படும் பெண்கள் கல்லூரிகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ?

23rd September 1958]

(ஆ) இக்கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் 1957-58-ம் வருஷத்திலே படித்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுள், ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a), (b) & (c) A statement [a] is laid on the table of the House.

SRI P. G. MANICKAM : கல்லூரிகளிலே படிக்கும் மாணவிகளிலே 100-க்கு 1 சத விகிதம்கூட ஹரிஜன மாணவிகள் படிப்பதாகத் தெரியவில்லே. ஆகையால் ஹரிஜன மாணவிகளுக்கு சலுகைகள் கொடுத்து அதன் மூலம் அதிக மாணவிகள் படிப்பதற்கான வாய்ப்பை சர்க்கார் ஏற்படுத்துவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணினவர்கள்தான் கல்லூரிக்குப் போக முடியும். எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணுமல் கல்லூரிக்குப் போக முடியாது. அப்படி பாஸ் பண்ணி யார் யார் விண்ணப்பித்துக்கொண்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. R. VISWANATHAN : கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் ஹோம் ஸயன்ஸ் கல்லூரியிலே இருக்கும் 56 பேரிலே ஹரிஜன மாணவிகள் ஒருவரும் இல்லே. இந்த ஹோம் ஸயன்ஸ் கல்லூரியில் ஹரிஜன மாணவிகள், பின் தங்கிய வகுப்பைச்சேர்ந்த மாணவிகள் சேர்க்கப் பட்டால் இம்மாதிரி துறையில் பயிற்சி பெருவதற்கு வாய்ப்பு இருக்கும்.

MR. SPEAKER : Let the hon. Member resume his seat. He is making a speech. He must ask questions. Next question.

Travelling allowance drawn by Ministers

MR. SPEAKER : The hon. Member Sri Authimoolam is not in his seat. The question and the answer will be printed in the proceedings.

* 443 *Q.*—SRI D. S. AUTHIMOOLAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount of travelling allowance drawn by each Minister in 1957-58?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [b] is laid on the table of the House.

Rural indebtedness

* 444 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal for scaling down debts incurred by peasants?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. K. PALANISAMI : உணவு உற்பத்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இம்மாதிரி கொடுக்க முடியாத கடன்களே எல்லாம் ஆந்திர சர்க்கார் செய்தது போல ஒரு பரிசீலனைக் கமிட்டியை நியமித்து ஏற்பாடு செய்யக்கூடாதா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்வியானது scaling down of debts-ஐப் பற்றியது. எதாவது திட்டமிருக்கிறதா என்று கேட்டதற்கு " இல்லே " என்று பதில் சொன்னேன்.

---

[a] Printed as Appendix IV on pages 583-584 infra.

[b] Printed as Appendix V on page 584 infra.

[23rd September 1958

SRI N. R. THIAGARAJAN : நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளுக்கு விவசாய இலாகா கடன் கொடுத்து வந்தது. இந்த வேலையை விவசாய இலாகாவிலிருந்து ரெவின்யூ இலாகாவிற்கு மாற்றி யிருக்கிறார்கள். அப்படி மாற்றியதால் பல தஸ்தவேஜுகள் கிடைக்க வில்லை என்ற காரணத்தால் 5 அல்லது 6 லட்சம் ரூபாய் வசூல் ஆகாமல் போய்விட்டது. இதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கனம் மின்சார அமைச்சர் அவர்களிடம் ஒரு விவரமான குறிப்பைக் கொடுத் திருக்கிறேன். இதைப்பற்றி ஆலோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member can put a separate question.

THE HON. SRI M. A. MANICKAVELU : தயவுசெய்து தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR: வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது என்பதுதான் நம்முடைய நாட்டின் பண்பு. அதை விட்டு, கடன் கொடுக்கிறவர்களிடத்தில் பணம் வருமோ, வராதோ என்ற எண்ணத்தை நாம் வளரச் செய்தால் அதனால் ஏழைகள் அதிகம் பாதிக்கப் படுவார்கள். . .

MR. SPEAKER : The question is out of order.

SRI K. VINAYAKAM : If the Government could not think of any proposal to scale down debts incurred by the peasants, will they at least think of a temporary moratorium, by which relief may be given to the peasants who could not repay now just at this moment?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, such action should be taken only in very, very difficult times. If we go on doing like that in normal times, it will affect rural credit.

SRI S. M. ANNAMALAI : இந்த விவசாயிகள் பாதுகாப்புக் கடன் சட்டம் 1958 ஜூன் மாதத்தோடு முடிவடைந்துவிட்டது. அதன் காரணமாக ஏராளமான வழக்குகள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. அந்தச் சட்டத்தை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : நமது நாட்டிலே பொது வாக 100-க்கு 75 பேர்கள் வரையிலே கடன்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் ராவணன் என்று சொல்வது உண்டு. கடன் பட்டவர்கள் இன்றைக்கு கலங்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு விமோசனம் அளிப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது இருக்கிற நிலவரம் என்னவென்றால் "கடன் கொடுத்தார் நெஞ்சம்போல்" என்பதுதான்.

SRI N. MAHALINGAM : தற்போது அரசாங்கம் கொண்டு வந்துள்ள பல சட்டங்களினால் விவசாயிகளுக்கு சரியானபடி கடன் கிடைக்காமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? தனிப்பட்டவர்கள் கடன் கொடுக்கும் முறையில் இப்பொழுது பல நிர்ப்பந்தங்கள் இருப்பதால், வட்டியை உயர்த்துவதற்கு சட்டப்படி அனுமதி கொடுப்பார்களா ?

23rd September 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : முக்கியமாக கிராமப் பகுதிகளிலே கடன் வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே இன்னும் அதிகமாக கஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்வதுதான் நல்லது என்று தோன்றுகிறது.

Smallpox

* 445 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether smallpox is widely prevalent in the Tindivanam town;

(*b*) the number of persons who lost their lives due to smallpox till 1st of May 1958; and

(*c*) the preventive steps taken by the Government in this regard?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No.

(*b*) There were 33 deaths from smallpox from the beginning of the year up to the week ended 3rd May 1958.

(*c*) Preventive measures such as disinfection of houses and intensive vaccination and revaccination of the population, etc., were carried out.

SRI M. JAGANNATHAN : Are the Government aware of the fact that the slum areas in the Tindivanam Municipality, where mostly Harijans live, have been badly neglected by the concerned medical authorities and no preventive measures have been taken in those areas?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir, I have no such information. If any epidemic breaks out, generally the authorities concerned first visit the slum areas and then take necessary steps.

Drainage system in Tiruchirappalli

* 446 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to prevent the flow of Tiruchirappalli municipal drainage water into the Cauvery river at points above the bathing ghats on the southern bank?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

Nagapattinam Port

* 447 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount allotted for the improvement of the Nagapattinam Port during 1958–59?

THE HON. SRI P. KAKKAN : A sum of Rs. 2,42,000 has been provided in the Budget for 1958–59 for making improvements to the Port.

SRI N. K. PALANISAMI : எனனென்ன திட்டங்களுக்காக செலவு செய்யப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Provision of a sea-face wall.

(*b*) realignment of South Groyne,

(*c*) providing pier with mobile pump for entrance channel, and

(*d*) improvements and extensions to wharves.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, what is the total amount to be spent for the completion of the scheme and when is it likely to be completed?

THE HON. SRI P. KAKKAN : Sir, a separate question may be put.

SRI N. S. RAMALINGAM : இந்தத் துறைமுகத்திற்கு முக்கியமாக வேண்டிய டிரட்ஜர் எப்பொழுது வாங்கிக் கொடுக்க முடியும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சொல்லுவதற்கு இல்லை. இருந்தாலும், கனம் அங்கத்தினர் தனியாக கேள்வி போட்டால் அதுபற்றி கவனிக்கலாம்.

SRI A. VEDARATHNAM : நாகப்பட்டிணம், கடலூர் போன்ற முக்கியமான துறைமுகங்களுக்கு போகவேண்டிய கப்பல்கள் எல்லாம் சென்னை துறைமுகத்தில் சில நாட்கள் வரையில் காத்துக் கொண்டிருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இந்த சிறு துறைமுகங்கள் அபிவிருத்தி அடையவேண்டுமானால் கப்பல்கள் அந்தந்த துறைமுகங்களுக்குச் சென்று சரக்குகள் அங்கு இறக்குமதி செய்யப்படுவதுதான் நியாயம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ? அதற்கு உத்தரவு இடுமா ?

THE HON. SRI P. KAKKAN : அது தெரிந்துதான் இந்தச் சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

SRI K. S. G. HAJA SHERIFF : Sir, are the Government aware that the working conditions depend upon the condition of the bar and if so, what is the position of providing a dredger at the bar?

THE HON. SRI P. KAKKAN : Sir, a separate question may be put.

SRI M. C. MUTHUKUMARASWAMY : நாகப்பட்டிணம் துறைமுகத்தில் கப்பல் நிற்கும் இடத்திற்கும், கரைக்கும் ஏறக்குறைய 5 மைல் தூரம் இருக்கிறது. அதனால் சரக்குகள் இறங்குவதற்கும் பிரயாணிகள் இறங்குவதற்கும் அதிக கஷ்டம் ஏற்படுகிறது. செலவும் அதிகமாகிறது. சென்னையைப்போன்று அந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் தயாராக இருக்கிறதா, அல்லது இனியாவது தயாரிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P KAKKAN : சென்னை போன்று அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் இல்லை. இருந்தாலும் அந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் இருக்கிறது.

Sri A. GOVINDASAMY : இந்தத் துறைமுக அபிவிருத்தித் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும் ? அதற்கு வேண்டிய மெஷினரி வந்து சேர்ந்துவிட்டதா ?

The Hon. Sri P. KAKKAN : தனி கேள்வி கேட்கவேண்டும்.

Houses for Harijans

* 448 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state what is the districtwise allotment of funds for the construction of houses for Harijans during 1958–59?

The Hon. Sri P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : 15–2–1958-ல் புது டில்லியில் நடந்த பின்தங்கிய வகுப்பு இலாகாவைச் சேர்ந்த ராஜ்ய மந்திரிகள் மகாநாட்டில் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 750 போதாது என்றும் இந்த மான்யத்தை அதிகப்படுத்தவேண்டும் என்றும் நமது ராஜ்ய ஹரிஜன நல இலாகா மந்திரி இந்திய சர்க்காரிடம் தெரிவித்தார்களா ? அப்படியென்றால், இந்திய சர்க்கார் அதற்கு என்ன பதில் அளித்தார்கள் ?

The Hon. Sri P. KAKKAN : அம்மாதிரி தெரிவித்தது வாஸ்தவம்தான். ஆனால் அது மத்திய சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு இன்னும் பதில் வரவில்லை.

Sri J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவில் 125 வீடுகள் தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. நீலகிரியில் குளிர் காரணமாக குடிசையில் வாழ்வதற்கே முடியாத நிலைமை இருப்பதனால், உடனடியாக அங்குள்ள எல்லா ஹரிஜனங்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : எல்லோருக்கும் உடனடியாக வீடுகள் கட்டிக்கொடுக்க முடியாது. இருந்தாலும் குளிர் பிரதேசமாய் இருப்பதால், அந்தப் பிரதேசத்திற்கு சிறிது அளவு சலுகை காட்டலாம்.

Sri M. JAGANNATHAN : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிலே தென் ஆற்காடு ஜில்லாவிற்கு 266 வீடுகள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாநிலத்திலே தென் ஆற்காடு ஜில்லாவிலே தான் அதிகமாக ஹரிஜனங்கள் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு போதுமான அளவுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் இந்த மாநிலத்தில் தென் ஆற்காடு ஜில்லாவில் ஹரிஜனங்களின் ஜனத்தொகை அதிகம்தான். அதை எந்த ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டோ அல்லது வேண்டுகோளின் பேரிலோ, எந்த நோக்கத்தோடு பிரித்தார்களோ தெரியாது. அங்கத்தினர் கோரிக்கை கவனிக்கப்படும்.

Sri K. P. PALANISWAMI : வீடு கட்டும் திட்டத்தை கொஞ்சம் நிறுத்தி விட்டு, பட்டா பூமியில் இருந்துகொண்டு அநேக கஷ்டங்களுக்கு உள்ளாகும் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் மாத்திரம் வாங்கித்தருவதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

---

[a] Printed as Appendix VI on page 585 infra.

[23rd September 1958

THE HON. SRI P. KAKKAN : மனைக்கட்டுகள் வாங்கிக்கொடுப்ப தற்காக இந்தத் திட்டத்தை நிறுத்தவேண்டாம். வீடுகள் கட்டிக்கொடுப்ப தற்கும், மனைக்கட்டுகள் வாங்கிக்கொடுப்பதற்கும், இரண்டிற்கும் சேர்த்து ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

SRI T. VELUCHAMI : வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் நோக்கம் என்ன ? அதாவது, ஹரிஜனங்களுக்கு நல்ல வீடுகள் இல்லாத குறைகள் அனைத்தையும் இந்தத் திட்டத்தினால் பூர்த்தி செய்து விடலாம் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்களுக்கு வீடுகள் இல்லாத குறையை இதன் மூலம் நூற்றுக்கு நூறு மடங்கு தீர்த்துவிடலாம் என்று அரசாங்கம் நினைக்கவில்லை. இதனால் ஓரளவுக்கு அந்தக் குறையை நீக்க லாம். இதைப் பார்த்து தெரிந்துகொண்டு, தன் கையே தனக்கு உதவி என்ற முறையில் அவர்களுக்கு தாங்களாகவே வீடுகள் கட்டிக்கொள்ளு வதற்கு ஏற்பாடுகள் செய்துகொள்ளும் எண்ணம் வரவேண்டும் என்பது தான் நோக்கம்.

SRIMATHI KAMALAMBUJAMMAL : வட்டார அபிவிருத்தி திட்டங் கள் உள்ள இடங்களில் தான் இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறதா ? அல்லது மற்ற இடங்களிலும் அமுலில் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : எல்லா இடங்களிலும் அமுலில் இருக்கிறது.

SRI M. P. PERIASAMI : பல வருஷங்களுக்கு முன்பு ஹரிஜனங் கள் தங்களுக்கு வீடுகள் வேண்டும், மனைக்கட்டுகள் வேண்டும் என்று சம் பந்தப்பட்ட ஜில்லா அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தாலும் அவைகள் உடனடியாக கவனிக்கப்படாமல் பல வருஷ காலமாக நீடித்துக் கொண்டேபோகிறது என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் உடனடியாக அந்த மனுக்களை பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு இடுமா ?

THE HON. SRI P. KAKKAN : வீடுகள் கட்டும் திட்டத்தை ஜில்லா அதிகாரிகள், கலெக்டர்கள் வெகு அக்கரையோடு கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதனால் இப்பொழுது இதுபற்றி உடனடியாக கவ னம் செலுத்தப்படுகிறது. அவர்களை அடிக்கடி ஞாபகப்படுத்தி எவ்வளவு துரிதமாக வீடுகள் கட்டிக்கொடுக்கும் பிரச்னையை தீர்க்கமுடியுமோ அவ் வளவு துரிதமாக வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI T. IRUSAPPAN : ஹரிஜனங்களுக்காக கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் பல சேதம் அடைந்தும், இடிந்தும் போயிருக்கின்றன. அவைகளை பராமரிக்க சர்க்கார் உதவி செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : எற்கனவே கட்டப்பட்ட வீடுகள் ஓரளவுக்கு சேதமடைந்திருந்தால், அவைகளை பராமரிப்பதற்காக குறிப் பாக பட்ஜெட்டில் தொகை ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. ஒரு சில இடங் களில் நிலைமை மிகவும் மோசமாக இருந்தால், அதுபற்றி எழுதினால் அதை அரசாங்கம் கவனிக்கலாம்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : சமுதாய நல திட்டப் பகுதியிலே ஹரிஜனங்களுக்கு ரூ. 500, 700 முழுவதும் ஆரம் பத்திலே கடனாக கொடுக்கப்பட்டது. இப்பொழுது ரூ. 500 மான்யமாகவும் ரூ. 200 அவர்கள் கையிலே இருந்தும் போடவேண்டும். இப்பொழுது ஏற்கனவே ரூ. 700, 800 கடனாகக் கொடுக்கப்பட்ட தொகையை வாங்கி வீடுகள் கட்டியிருக்கும் ஹரிஜனங்கள் அதை திருப்பிக் கொடுப்பதற்கு ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு முன்பு மான்யம் கொடுக்கப்

படவில்லை. அதனால் அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் முறையிலே இந்த மான்யம் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : முன்பு கடனாகக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இந்தத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஏற்கெனவே கடன் வாங்கி கட்டப்படும் வீடுகள் கட்டி முடியாத காலனியாக இருந்தால் தான், அதுபற்றி கவனிக்கலாம். ஏற்கனவே கடன் கொடுத்து முடிந்து விட்டதைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாது.

SRI A. GOVINDASAMY : ஹரிஜனங்கள் காலனி, ரோடு ஓரங்களில்தான் கட்டவேண்டுமென்று ஏதாவது நிபந்தனை இருக்கிறதா ? உள்புற கிராமங்களிலும் இந்தக் காலனிகளை அமைப்பதற்கு சர்க்கார் உத்தரவு போடுவார்களா ? இப்பொழுது ரோடு ஓரத்தில்தான் அமைக்கப் படவேண்டுமென்று சொல்லுவதாகத் தெரிகிறது.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் எண்ணம் அப்படி இருப்பதுபோல் தெரிகிறது. எந்தக் கிராமங்களில் எந்த இடத்தில் சர்க்காருக்கு சொந்த இடம் இருக்கிறதோ அந்த இடத்தில் முதலில் வீடுகள் கட்டுகிறோம். ரோடு ஓரத்தில் இருந்தாலும் சரி, ஊருக்குள் இருந்தாலும் சரி அந்த இடத்தில் கட்டுகிறோம். கூடியவரையில் செலவு அதிகமாகாமல் கட்டவேண்டுமென்று நினைக்கிறோம். அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் இல்லாத இடங்களில் நிலங்களை ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்டப்படவேண்டும்.

SRI P. G. MANICKAM : இதற்காக கொடுக்கப்படவேண்டிய மான்யத் தொகையை இந்திய சர்க்கார் அனுப்பிவிட்டார்களா ? அப்படியானால் எவ்வளவு தொகை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இந்திய சர்க்கார் இந்தத் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமோ அதை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். மேலும் சிறிது அளவு தொகை வேண்டுமென்று சொன்னாலும், அவர்களிடத்தில் நாம் வாங்கிக்கொள்ளலாம்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : இப்பொழுது ஹரிஜனங்களுக்கு மான்யம் கொடுப்பதில் 20, 30 வீடுகள் சேர்ந்து கட்டப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதனால் ஏழை ஜனங்களுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. அவர்களால் 8, 10 வீடுகள் தான் ஒரே இடத்தில் கட்ட முடிகிறது. அதனால் 10 வீடுகள் ஒரே இடத்தில் பிளாக்காக கட்டினாலும், அதற்கு சர்க்கார் அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஜாதியைப் பற்றி குறிப்பிட விரும்பவில்லை. இருந்தாலும் செக்கிலியர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பது எல்லோரும் அறிந்ததே. ஆகவே, அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்கு ஓரளவு பணத்தை கடனாகவாவது கொடுத்து உதவி செய்ய முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : குறைந்தது 20 வீடுகள், அதிகபட்சம் 30 வீடுகள் கட்டவேண்டுமென்பது சர்க்கார் உத்தரவு. சில இடங்களில் 20 வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கு முன்வராவிட்டால், அதற்காக 20 வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை நிறுத்தவேண்டாம். அப்படி யாராவது 10, 15 வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்கு முன்வந்தால் சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளுவதாகத்தான் இருக்கிறது. 8, 10 வீடுகள் கட்டினால் அதிகப்படியாக நஷ்டம் ஏற்படுகிறது, அதற்கு செலவு அதிகமாகிறது என்ற காரணத்தினால்தான் குறைந்தபட்சம் 20 வீடுகளும், அதிகபட்சமாக 30 வீடுகளும் கட்டவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட சில இடங்களில்மட்டும் மக்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள்

என்பதை எழுதினுல் அதுபற்றி கவனிக்கலாம். ஆனுல் எல்லா இடங்களிலும் இம்மாதிரி 8, 10 வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. P. PERIASAMI : இந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் பணமும் செலவாகிறது, கஷ்டங்களும் இருக்கின்றன. ஆனுல், இப்பொழுது, ஒவ்வொரு ஜில்லாவிலும், ஹரிஜனங்கள் சொந்த வீடில்லாமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே, வீட்டுக்கு வேண்டிய நிலங்களை ஜாரி செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ? அப்படிச் செய்வதனுல், ஹரிஜன மக்கள் வீடில்லாமல் படும் அதிகக் கஷ்டம் நிவர்த்தியாகும் என்பதை சர்க்கார் உணருகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : ரூபாய் 8 லட்சத்திற்கு அதிகமாகவே மனைக்கட்டுகள் ஆர்ஜிதம் செய்வதில் சர்க்கார் செலவு செய்து இருக்கிறது. வீடு கட்டிக் கொடுப்பது போலவே, இதிலேயும் சர்க்கார் அக்கரை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Highly-paid officers.

* 449 Q.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Chief Minister be pleased to state the number of officers who draw a salary of Rs. 2,000 (two thousand) and above per mensem?

THE HON. SRI C. SUBRAMANIAM : 40 (Forty).

Harijan students

* 450 Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, தாளவாடி மலைப்பிரதேசத்திலேயிருக்கும் ஜில்லா போர்டு ஆரம்பப் பாடசாலைகளிலே எத்தனை ஹரிஜன மாணவர்களும், மாணவிகளும், 1958-ம் வருஷத்தில் படித்துக்கொண்டிருக்கிருர்கள் ?

(ஆ) எந்தெந்த பாடசாலைகளிலே படித்துக்கொண்டிருக்கும் ஹரிஜனக்குழந்தைகளுக்கு நண்பகல் உணவு அளிக்கப்பட்டு வருகின்றது ?

(இ) 1957–58-ம் ஆண்டில் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) 110 boys, 42 girls.

(b) No mid-day meals are supplied in any of the district board schools.

(c) Nil.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களிலே ஹரிஜன மாணவர்களுக்கு ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டிலிருந்து ஜில்லா கலெக்டர் மத்தியான சாப்பாடு வசதி செய்கிருர்கள். சில இடங்களிலே, நண்பகல் உணவை அதோடு சேர்த்துப்போட்டு இந்த ஏழை மாணவர்களுக்கு சாப்பாடு போடும் திட்டத்தை சர்க்கார் வகுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is only a suggestion for action, Sir.

23rd September 1958]

Zonal Council

* 451 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a Zonal Council meeting was held during June 1958 at Ootacamund;

(*b*) the main subjects discussed;

(*c*) whether allowing of Godavari River water for Madras was discussed at the meeting;

(*d*) whether Parambikulam Scheme was discussed;

(*e*) whether forming of South Zone Reserve Police was discussed;

(*f*) whether implementation of land reforms in States was discussed; and

(*g*) if so, the details of the same on each item?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. The meeting was held on 1st June 1958.

(*b*) *to* (*f*) Questions connected with the Regional Power Grid for the Southern Zone, the working of the Southern Food Zone, the diversion of waters from the waterspread of Western Ghats to the east of the Ghats, the formation of a common police reserve force for the Southern Zone and the classification of power projects into ' core ' and ' non-core ' projects, etc., were generally discussed.

(*g*) As the discussions related to many inter-State problems of a delicate nature, it will not be in the public interest to disclose them. But, if any major decisions affecting this State are reached, the Government will keep the Legislature informed.

SRI N. K. PALANISAMI : பரம்பிக்குளம் திட்டம் சம்பந்தமாக இரு சர்க்கார்களும் கூடி, பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து, பரம்பிக் குளத் திட்டத்தை நடைமுறையிலே கொண்டுவர என்ன பேசப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பரம்பிக்குளம் பற்றிய பேச்சு வார்த்தைகளில் எவ்வளவு சீக்கிரம் ஒப்பந்தம் ஏற்படவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, since the Andhra State is one of the members of the Zonal Council, did not the Madras Government utilize that opportunity of investigating the question of getting water from the Godavari and the Krishna Rivers to the State of Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM : No investigation was done in the Zonal Council. But we wanted an investigation to be made with reference to the feasibility of the diversion of these waters.

SRI K. VINAYAKAM : Sir, what was the reaction of the Andhra State when the question was mooted by our State in this matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : I think, Sir, the reaction was favourable.

[23rd September 1958

SRI N. MAHALINGAM : 1955-ம் வருடம், டிசம்பர் மாதத்தில் கள்ளிக்கோட்டையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் பரம்பிக்குளத் தண்ணீர் சென்னைக்குக் கொடுக்கக்கூடாதென்று தீர்மானம் நிறைவேற்றியது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதையெல்லாம் கட்சிப் பிரச்சினையாக்கக்கூடாது என்று முதல் அமைச்சரவர்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைக் கட்சிப் பிரச்சினை யாக்காமல், இரண்டு ராஜ்யங்களின் மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய அளவிலே ஒப்பந்தம் செய்துகொள்ள எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைக் கட்சிப் பிரச்சினையாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : வட்டாரக் குழு ஆலோசனைக் கூட்டத்தில், உணவு பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மற்ற திட்டங்களைவிட தண்ணீர்த் திட்டம் நிறைவேற்றுதற்கு வழிவகைகள் செய்ய அதன் மண்டல மூன்று மாநிலங்களிடையேயும் ஏதேனும் திட்டம் உருவாக்கப்பட்டதா, அதன் முடிவு என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றித்தான் இப்பொழுது சொன்னேன். மேற்குத் தொடர்ச்சி மலைத் தண்ணீரை எந்த அளவுக்கு கிழக்கே திருப்ப முடியும், ஆந்திராவில் இருக்கக்கூடிய உபரித் தண்ணீரை எந்த அளவுக்கு நம் ராஜ்யத்துக்கு உபயோகப்படுத்த முடியும் என்பதெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மேற்கேபாயும் பம்பையார் கிரியாறு தண்ணீரை, திருப்ப யோசனை செய்யப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : யோசிக்கப்பட்டது, பரிசீலனை செய்யவேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது.

SRI K. VINAYAKAM : Was any consensus of opinion there between the States concerned to have uniform legislation regarding the question of land reforms in the southern zone?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think, Sir, a uniform policy can be adopted with reference to all the States. Conditions may differ from State to State. Therefore, the States will have to come to final decisions regarding land reforms with reference to the conditions obtaining in the States concerned.

SRI A. GOVINDASAMY : இந்த பரம்பிக்குளத் திட்டத்தை நிறைவேற்றுவதில், கேரள மேலிடத்தில் என்னென்ன உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அது பேச்சு வார்த்தையில் இருக்கும் சமாசாரம். அதை விவாதிக்கக் கூடாது.

SRI T. VELUCHAMI : பம்பையார் சம்மந்தமாக கேரளா சம்மதம் தெரிவித்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பரிசீலனை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

23rd September 1958]

Public Health and Nursing Course

* 452 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have instituted an integrated course of Public Health and Nursing in the General Hospital, Madras;

(*b*) if so, the details thereof; and

(*c*) the expenditure involved and the number of trainees who passed the course in 1957?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The objectives of the course are to train nurses who can function both in hospitals and Public Health fields and to develop Public Health as an integral part of the basic training. The trainees are instructed in the following additional subjects :—

Personal Hygiene.

Community Health.

Health teaching.

Preventive Medicines and Public Health.

The World Health Organization has provided an International nurse to assist in the implementation of the scheme and also a station wagon, teaching aids, text-books and kit bags.

(*c*) The expenditure involved is Rs. 19,818 recurring per annum and Rs. 350 non-recurring. One hundred and thirty-nine nurse pupils have been admitted to the course on or after 1st July 1957. The first batch of nurse pupils who are undergoing the training will be completing their course only in June 1960.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி ஒரு திட்டம் மதுரையில் ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது இதை ஒரு இடத்திலே, சென்னையிலே, ஏற்படுத்தி நடத்தி வருகிறோம். எல்லா இடத்திலும், மதுரையில், விஸ்தரிக்க, மற்ற எல்லாவற்றையும் பார்த்து விட்டு அப்புறம் செய்ய வேண்டும்.

DR. SRIMATHI T. S. SOUNDRAM RAMACHANDRAN : பி.எஸ்ஸி.-இன் நர்ஸிங் என்ற கோர்ஸ் இப்பொழுது டில்லியில்தான் இருக்கிறது, அநேகம் பேர் அங்கே போகமுடியாமல் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. அந்த கோர்ஸை மதராஸிலே ஏற்படுத்த எதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தற்காலம் அம்மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை.

House-sites for Harijans

*453 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக் கட்டு நிலங்கள் கிரயத்துக்கு வாங்கி இலவசமாகக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக ஜில்லா ஹரிஜன நல இலாகா மேற்பார்வையின் கீழ் எந்தெந்த ஜில்லாக்களிலே ஸ்பெஷல் தாசில்தார்களும், சம்பந்தப்பட்ட கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் ?

[23rd September 1958

THE HON. SRI P. KAKKAN : **A statement [a] is placed on the table of the House.**

SRI P. G. MANICKAM : ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு ஆர்ஜிதம் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க ஒவ்வொரு ஜில்லாவிலும், தாசில்தார், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கோயமுத்தூர் ஜில்லாவில், இம்மாதிரி நியமிக்கப்படவில்லை. ஒரு அப்பர் டிவிஷன் இளார்க்கு கூட பெப்ரவரி, 1959-ல் நியமிக்கப்படுவதாக இருக்கிறது. ஆனால் கோயமுத்தூர் ஜில்லாவில் 200-க்கு மேற்பட்ட சேரிகளில் வீடு மனைக்கட்டு ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். ஆயிரக்கணக்கான ஹரிஜனக் குடும்பங்கள் வீடு நிலங்கள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே ஒரு ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்க சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : தாசில்தார் நியமிப்பதோ, கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதோ, ஜில்லாவில் உள்ள கோரிக்கைகளைப் பொருத்தது; ஜில்லாக் கலெக்டர் எழுதினால் அது பற்றி யோசிக்கப்படும்.

10 a.m.

MR. SPEAKER : It is now 10 o'clock. The question-hour is over. The rest of the questions together with their answers will be printed in the Proceedings.

SRI K. VINAYAKAM : Sir, my question, viz., Question No. 459 may be taken up to-morrow as I want to put some supplementaries.

(Sri A. A. Rasheed, Sri A. Govindasamy and some other hon. Members also rose.)

MR. SPEAKER : I cannot postpone all the questions to to-morrow. I can allow one or two questions only to be taken up to-morrow. Otherwise, we must be prepared to sit for one more hour for Questions.

SRI K. VINAYAKAM : Sir, I request that Question No. 459 may please be taken up to-morrow.

MR. SPEAKER : All right. It will be taken up to-morrow.

(Sri A. A. Rasheed and Sri A. Govindasamy rose.)

MR. SPEAKER : I have to repeat that I can postpone only one more question for being answered to-morrow. I have already made the position very clear and have told the hon. Members that if they want to put supplementary questions on all questions, some questions will have to be left unanswered. The hon. Members have been putting supplementaries knowing fully well that some of the questions will not be answered. So, I shall allow one more question to be taken up to-morrow. Which question does Mr. Rasheed want to be postponed to to-morrow?

SRI A. A. RASHEED : Question Nos. 462, 463 and 465, Sir.

MR. SPEAKER : No, I cannot allow more than one question. Only question Nos. 459 and 462 are postponed to to-morrow.

---

[a] Printed as Appendix VII on pages 585-587 infra.

23rd September 1958]

SRI K. VINAYAKAM : May I draw the attention of the Chair to the fact that you can use your discretion and extend the question hour beyond one hour according to the rules of the Assembly. I request, Sir, that you must be kind and generous to the House.

MR. SPEAKER : I have used my discretion and said that the question hour is over at 10 o'clock.

Pambaiyar Scheme

* 454 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்கள் பயனடையக்கூடிய "பம்பையாறு" திட்டத்தின் எஸ்டிமேட் என்ன ?

(ஆ) எந்தெந்த பகுதியில் எவ்வளவு விஸ்தீர்ணம் இந்த திட்டத்தால் பயனடையும் ?

(இ) இந்த திட்டத்திற்கு கேரள சர்க்காரின் சம்மதம் கிடைக்கும் சாத்தியம் இருக்கிறதா ?

(ஈ) இந்தத் திட்டம் எப்போது நிறைவேறும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) About Rs. 40 crores on a rough calculation.

(*b*) It is not possible to give the extent of area irrigable or the localities that will be benefited as no proper investigation has yet been carried out.

(*c*) The matter has to be negotiated with the Kerala State.

(*d*) It cannot be stated when the project will be commenced as not even the preliminary investigation has been made.

Non-Gazetted Officers

* 455 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received the resolutions passed in the N.G.Os.' Conference held in Salem during June 1958, regarding revision of pay scales, merger of half dearness allowance with pay in case of N.G.Os. drawing Rs. 250 and less and regarding the abolition of secret file system; and

(*b*) if so, the steps taken by the Government on each resolution?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Resolutions regarding the revision of pay scales and merger of half dearness allowance with pay, passed in the Annual State Conference of the N.G.G.Os. held at Salem on 22nd June 1958, have been received and they are being examined.

No resolution regarding abolition of secret file system has been received.

[23rd September 1958

Birth control

* 456 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal before the Government to ban the operation method of birth control?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

Family Planning

* 457 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the steps taken by the Government to popularise Family Planning;

(*b*) the percentage of reduction in birth-rate—

(i) so far achieved; and

(ii) aimed at, at the end of the Second Five-Year Plan; and

(*c*) whether there is any proposal to legalise abortion?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) A statement[a] is placed on the table of the House;

(*b*) (i) This has not been assessed;

(ii) No definite target has been fixed for the State. So far as Madras City is concerned, the aim is to reduce the birth-rate which is about 40 per 1,000 to 28 (the highest known European rate) in the next five years.

(*c*) No, Sir.

* 458 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government propose to start a Family Planning Training Centre at Madras; and

(*b*) if so, what contribution and help this Government will get from the Central Government?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) A Training Institute is already functioning at the Government Hospital for Women and Children, Madras.

(*b*) The Government have sanctioned the upgrading of the Training Institute into a Regional Training Centre on the lines suggested by the Government of India. For this upgraded centre the Government of India have agreed to meet all non-recurring expenditure and recurring expenditure on a sliding scale. They have also offered to pay stipends for all trainees and travelling allowance for trainees deputed by other organizations.

Sathanur Project

*460 *Q.*—SRI P. S. SANTHANAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த்தேக்கம் கட்ட மதிப்பிட்டத் தொகை எவ்வளவு ?

---

[a] Printed as Appendix VIII on pages 587-588 infra.

23rd September 1958]

(ஆ) பிடித்தத் தொகை எவ்வளவு ?

(இ) குடி தண்ணீர் கஷ்டம் நீக்கவும், பாசன வ்சதி அளிக்கவும், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து திருவண்ணுமலைக்கு ஒரு கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டுவர உத்தேசம் உண்டா ?

(ஈ) இல்லாவிடில், அப்படிப்பட்ட ஒரு திட்டம் எப்போதாவது யோசனையில் இருந்ததா ?

(உ) அப்படி இருந்திருந்தால், ஏன் அது கைவிடப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 289·28 lakhs.

(*b*) Rs. 234·40 lakhs.

(*c*) No, Sir.

(*d*) No.

(*e*) Does not arise.

Economy in Government departments

* 461 *Q*.—SRI M. P. SARATHI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received the Report of the Special Officer appointed by the Government for examining the methods of effecting economy in Government departments;

(*b*) the departments which were examined;

(*c*) the departments which are yet to be examined;

(*d*) whether the Government have accepted the recommendations; and

(*e*) the amount of savings to the Government thereby?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) Almost all the departments have been examined.

(*d*) & (*e*) The recommendations are being examined.

Sri Ramaswamy Mudaliar Choultry.

* 463 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that private buildings have been allowed to be constructed within the compounds of Sri Ramaswamy Mudaliar Choultry opposite to Moore Market in Madras City;

(*b*) whether it is a fact that this land was originally alienated by the Government of India on the specific condition that the land has to be used for charitable purposes only; and

(*c*) if so, what action the Government propose to take against the authorities responsible for the violation of the original terms of the deed?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The land was originally granted by this Government to the late Sri Salavai Ramaswamy Mudaliar for running a choultry for use of the railway travellers.

(*c*) The matter is under the consideration of the Government.

Schools run by Harijan Welfare Department

* 464 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மாநில ஹரிஜன நல இலாகாவால் நடத்தப்பட்டுவரும் நடுத்தர பள்ளிகளும், உயர்தர பள்ளிகளும் எத்தனை ?

(ஆ) தஞ்சை ஜில்லாவில் அவ்வித பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்துக்கு ஏதாவது மனு வந்ததா ?

(இ) அதன் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Sixteen Higher Elementary Schools and three High Schools.

(*b*) Yes. One petition.

(*c*) The Government have sanctioned the conversion of the Harijan Welfare Elementary School at Muthuveerakandianpatti in Tanjore district into a higher elementary school during the current year.

Parambikulam Waters

* 465 *Q.*—SRI A. A. RASHEED AND SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to refer the question of sharing Parambikulam waters to the Union Government for arbitration?

THE HON. SRI P. KAKKAN : The question is under consideration.

* 466 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN AND SRI M. KARUNANITHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether negotiations regarding the Parambikulam waters of Kerala have ended ; and

(*b*) if so, the results thereof?

THE HON. SRI P. KAKKAN : The answer to the first part of the question is in the negative. The second part does not arise.

Transport Advisory Committee

* 467 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state the names of the Members representing students, middle class employees and Legislators in the State Transport Advisory Committee?

THE HON. SRI V. RAMAIAH : The term of the members of the State Transport Advisory Committee expired on 15th July 1958 and the question of reconstituting it is under the consideration of the Government.

23rd September 1958]

Drinking water wells

* 468 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of drinking water wells constructed under the Local Development Scheme in Class I and Class II Panchayats in 1957–58;

(*b*) the number of pressure pump-sets sanctioned under the Local Development Scheme for the supply of drinking water through street mains in 1957–58; and

(*c*) how many of them are in good working condition?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Forty wells in Class I Panchayats and 437 wells in Class II Panchayats were constructed in 1957–58 under the Local Development Works Programme.

(*b*) Forty-two pressure pump-sets were sanctioned in 1957–58 under the Local Development Works Programme.

(*c*) Of the 42 pressure pump-sets sanctioned, 34 are in good condition, 6 works are in progress and 2 motors are out of order.

Marudayar

* 469 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilize for irrigation purposes waters in Marudayar at any place outside Tiruchirappalli district?

THE HON. SRI P. KAKKAN : The detailed investigation of the scheme for the utilization of the Marudayar waters has not yet been made. It cannot therefore be stated whether the waters will be utilized outside the Tiruchirappalli district.

Aranmore Palace, Ootacamund

* 470 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஊட்டியிலிருக்கும் ஆரன்மோர் அரண்மனையை (**Aranmore Palace in Ootacamund**) சென்னை சர்க்கார் விலைக்கு வாங்கி இருக்கிறார்களா ?

(ஆ) விலைக்கு வாங்கியிருந்தால் கிரயத்தொகை எவ்வளவு ?

(இ) என்னென்ன காரியங்களுக்காக இந்த அரண்மனையை உபயோகப்படுத்த சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனர் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The price is being finalised.

(*c*) The Government have decided to maintain the Aranmore Palace as a first-class Guest House with catering arrangements.

[*Note.*—**An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

(1) BILLS RECOMMENDED BY THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Amendment) Bill, 1958.

(2) BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have also to announce that the Madras Appropriation (No. 5) Bill, 1958 (L.A. Bill No. 31 of 1958) and the Madras Appropriation (No. 4) Bill, 1958 (L.A. Bill No. 32 of 1958) have been passed by the Madras Legislative Council on 20th September 1958 without any recommendation.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That leave be granted to introduce the Madras General Sales Tax (Amendment) Bill, 1958."

MR. SPEAKER : The question is—

" That leave be granted to introduce the Madras General Sales Tax (Amendment) Bill, 1958."

The motion was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I introduce the Madras General Sales Tax (Amendment) Bill,[a] 1958.

The Bill was introduced.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I make a request to you that an early date may be fixed for the consideration of this Bill as this Bill will have to come into effect from 1st October 1958. I hope you will take up this matter for consideration.

MR. SPEAKER : I have called for a meeting of the Business Advisory Committee and it will meet in another half an hour. I find that the progress made on the Panchayats Bill is very slow. I certainly feel that the time allotted is not sufficient. So, I am asking the Business Advisory Committee to make some alternative suggestion either to extend the days of sitting of the House or to adopt certain other measure or to suggest some other solution. I shall announce the decision of the Business Advisory Committee after one hour or so. I am sure that the Committee will also consider the request of the Hon. the Leader of the House for fixing suitable dates for the consideration of the General Sales Tax (Amendment) Bill. Meanwhile, the House may proceed with

[a] Published in the *Fort St. George Gazette*, dated 23rd September 1958.

23rd September 1958] [Mr. Speaker]

the discussion on the Panchayats Bill. Yesterday, we decided that only Leaders of Parties will speak today. But, in view of the desire expressed by many more hon. Members to speak on this Bill, I shall allow the general discussion to proceed just now so that those hon. Members who wish to take part in the discussion may do so. After the meeting of the Business Advisory Committee, I shall announce its decision. I still feel that Members must speak only for ten minutes each. As I have got requests from a large number of members, I fix a time-limit of 10 minutes for each speaker. Now, Sri Selvarajan will speak.

(2) THE MADRAS PANCHAYATS BILL, 1958
(L.A. BILL NO. 33 OF 1958)—*cont.*

Sri M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, நீண்ட நாள் நினைவு, வெகு கால முயற்சி இனிமேல் பலன் தரும் அளவில் இந்த பஞ்சாயத்து மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து மசோதாவின் தொடர்ச்சியாகவே ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் அமைப்பும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலின் எல்லையை வரையறுக்க ஜில்லாக்களை பல பகுதிகளாகப் பிரிக்கும் அடிப்படையில் ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவினுடைய தலை நகர அமைப்பு ஜில்லாக்களின் அமைப்பு இவைகள் எல்லாம் வெகு காலமாகவே பரம்பரையாக சரித்திர பூர்வமானதாக இருந்து கொண்டு வருகிறது. கடந்த சில வருஷங்களாக ஜில்லாவை ஒரு யூனிட்டாக வைத்து எவ்வளவோ அபிவிருத்தி வேலைகள் எல்லாம் நடந்து வந்திருக்கின்றன. அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டும் இருக்கின்றன. சிற்சில பாசன வசதிகளும், அணைக்கட்டு திட்டங்களும் அமைக்கப்பட்டு அவைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சில புதிய அணைத் திட்டங்களின் பாசன அமைப்பு விதிகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. இப்படிப்பட்ட புது அமைப்பினால் ஏற்கனவே செய்து வந்த பல முக்கியமான வேலைகள் எப்பகுதியைச் சேர்ந்தது என்று ஒதுக்கப்படுவதன் காரணமாக மக்களின் சுமுகம் தவறிவிட இடம் கொடுத்து விடக்கூடாது. ஜில்லா பிரிவினை காரணமாக சிக்கனம் தேடும் இந்நாளில் சிக்கனத்திற்கு பதில் அதிகச் செலவு ஏற்பட்டு விடும் என்று நான் அஞ்சுகிறேன். அத்தியாவசியம் எனக் கருதினால் சில பெரிய ஜில்லாக்களை வேண்டுமானால் பிரித்து அமைத்துக்கொள்ளலாம். சேலம், கோயம்புத்தூர் போன்ற 30 லட்சம் ஜனத்தொகைக்கு அதிகமாகவுள்ள ஓரிரண்டு ஜில்லாக்களை பிரிக்கவேண்டும் என்று நினைத்தாலும் அப்படி பிரித்து அமைத்து நிர்வாகம் செய்து கொள்ளலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். புதுக்கோட்டையை தலை நகராகக் கொண்ட ஒரு ஜில்லாவையும் அவசியமானால் அமைத்துக்கொள்ளலாம். அப்படி அமைக்கும்போது திருச்சியிலிருந்து சில பகுதிகளையும், ராமனாதபுரத்திலிருந்து சில பகுதிகளையும் எடுத்து புதுக்கோட்டையுடன் சேர்த்து ஒரு புது ஜில்லாவாக ஆக்கினாலும் ஆக்கலாம். சட்டசபை அங்கத்தினர், கீழ் சபை அங்கத்தினர் ஒருவர் தமது உத்தியோக முறையில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கத்தினராவார் என்றும் அப்படி அவர் ஆகும்போது அவர் அதில் எக்ஸ் அபிஷியோ முறையில் அங்கம் வகிப்பார் என்றும் அவருக்கு தீர்மானம் அனுப்பவதற்கோ அல்லது கேள்விகள் கேட்கவோ உரிமை உண்டென்றும் ஆனால் தன்னுடைய வாக்குரிமையை அளிக்கவோ கூடாது என்றும் சொல்லப்படுகிறது. சட்டசபை, கீழ் சபை அங்கத்தினர்கள் யூனியன் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டும் மெம்பராக வரலாம். அவர்களுக்கு இப்படிப்பட்ட ஓட்டளிக்கும் அதிகாரம் இல்லாமல் இருப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன். மேல் சட்டசபை அங்கத்தினர்கள் சிலர் ஸ்தல ஸ்தானப் பிரதிநிதிகள், மேல்சபை அங்கத்தினர்கள், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் இதில் அங்கம் வகிக்கக்கூடாது என்ற நிலைமை இருப்பதை மாற்றி அமைக்க வேண்டும். தற்போது திட்ட அடிப்படையில் நடந்து வரும் பல வேலைகளுக்கு ராஜ்ய, மத்திய அரசாங்கங்களின் மானியங்களும் அனுமதியும்

[Sri M. S. Selvarajan] [23rd September 1958

தேவைப்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட அங்கத்தினர்கள் அவைகளில் பரிபூரணமாக அங்கம் வகிக்கவும் வாக்குரிமைகளை பரிபூரணமாக கொடுக்கவும் அவர்கள் இடம் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும். ஒருக்கால் டியல் ரெஸ்பான்ஸ்பிலிட்டி இருக்கக்கூடாது என்பதற்காக இப்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ என்னவோ. நிர்வாகப்பொறுப்பேற்கத் தடை செய்து வாக்குரிமை கொடுப்பதில் எந்த விதமான தவறும் இல்லை என்பது என்னுடைய கருத்து. பஞ்சாயத்து யூனியனுக்குப் பிரதிநிதிகளாக பஞ்சாயத்துத் தலைவரைத்தான் தேர்ந்தெடுத்தாக வேண்டும் என்றும் அங்கத்தினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் வெளியாரைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு இம்மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும். சில கிராமங்களில் இருக்கக்கூடிய சிலர் போட்டியில் தோல்வி அடைந்திருக்கலாம் அல்லது அவர்களுக்கு தேர்தலில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போயிருக்கலாம். அத்தகையோருக்கு யூனியன் பிரதிநிதிகளாக வருவதற்கு வழங்கப்படும் வாய்ப்பு கிராமத்தில் சுமுக நிர்வாகத்திற்கு வழி செய்யும். ஆகையால் வெளியாரைத் தேர்ந்தெடுக்கவிருக்கும் உரிமை சரியானதே. மேஜர் பஞ்சாயத்துக்களின் நிர்வாகப் பொறுப்பாளியான நிர்வாக அதிகாரிகளின் வரம்பற்ற அதிகாரத்தை முறைப்படுத்த பஞ்சாயத்துத் தலைவருக்கும் கூட்டுப்பொறுப்பளிக்கும் விஷயம் முன்பே பரிசீலனையிலிருந்தது. எக்சிக்யூடிவ் ஆபீசர்களுடன் செக்கில் கையெழுத்திட கவுன்டர் சிக்நேசர் செய்வதற்கு உரிய வாய்ப்பு தலைவருக்குக் கொடுக்கலாம். இது போன்ற காரியங்களில் பஞ்சாயத்து தலைவர் எக்சிக்யூடிவ் அதிகாரியை கலந்து கொள்ளவும், தவறுகளை நீக்கவும் இந்த முறையை வகுக்கலாமா என்பதை பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபோல பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் தலைவராக இருக்கக்கூடியவர்கள், கமிஷணரோடு அதிகாரத்தை எந்த அளவு பகிர்ந்து கொள்ளலாம் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும்.

10-10 a.m. முனிசிபல் சட்டத்தின் பிரகாரம் முனிசிபாலிட்டியிலே இருக்கும் காலி நிலங்களுக்குக் கூட தண்ணீர் தீர்வை, லைட் தீர்வை போன்றவை விதிப்பது மூலம் நிலத்திற்குக்கூட தீர்வை விதிக்கும் அதிகாரம் முனிசிபல் கவுன்சில்களுக்குக்கூட இருக்கிறது. அதுபோன்று டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் அங்குள்ள காலி நிலங்களுக்குத் தீர்வை விதிக்கும் அதிகாரத்தை வழங்குவது மூலமாக அரசியல் சட்டத்தின் உண்மையான கருத்துப் பிரகாரம் பஞ்சாயத்துக்கள் "யூனிட்ஸ் ஆப் ஸெல்ப்-கவர்ன்மெண்ட்" என்று சொல்லக்கூடிய முறையில், பூரண அதிகாரமுள்ள பஞ்சாயத்து அமைப்புகளாக அமைவதில் தவறு என்ன என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம்.

ஜில்லா போர்டுக்கு மாற்று ஸ்தாபனம் என்ற கருத்தோடு, ஜில்லா போர்டு நிர்வாகத்திலே இருந்துவந்த பாடசாலைகளை பஞ்சாயத்து யூனியனுடைய பொறுப்பிலே மாற்றவேண்டும் என்ற கருத்துப்படத்தான் ஒப்படைக்கப்படவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அரசாங்கமே ஜில்லா போர்டு பாடசாலைகளை எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை என்று சிலர் நினைத்தாலும், ஜில்லா போர்டு ஆரம்பப் பாடசாலைகளை பஞ்சாயத்து யூனியனில் ஒப்படைப்பதில் தவறில்லை என்பது என் அபிப்பிராயம். ஜில்லா போர்டு பாடசாலைகள் அல்லாத, சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளுடைய நிர்வாகத்திற்கு பஞ்சாயத்து யூனியன் கையிலே கிராண்டு கொடுக்கும் பொறுப்பை ஒப்படைப்பது என்பது சரியல்ல. பாடசாலை ஆசிரியர்களாக தொழில் புரிவதற்கு வர வர பெண்களுக்கு கவர்ச்சி ஏற்பட்டு வருகிற காலத்தில், பஞ்சாயத்து நிர்வாகிகள் கையிலோ அங்கத்தினர்கள் கையிலோ விளையாட்டுக் கருவிகளாக ஆசிரிய, ஆசிரியைகள் ஆகிவிடுவார்களோ என்று நான் கவலைப்படுகிறேன். ஆகவே, இதுபோன்றவைகளில் விஷப் பரிட்சை வேண்டாம் என்பது என்னுடைய வேண்டுகோள். எப்படி ஹைஸ்கூல் நிர்வாகங்களுக்கு அரசாங்கம் ஜில்லா கல்வி அதிகாரி சிபாரிசு மூலமாக மான்யம் வழங்குகிறதோ, அதுபோன்று உதவிபெறும் ஆரம்பப்

23rd September 1958] [Sri M. S. Selvarajan]

பாடசாலைகளைப் பொறுத்தும் அரசாங்கமே பொறுப்பை வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். பின்னர் அவசியம் ஏற்பட்டால், ஜில்லா போர்டு பாடசாலைகளை நிர்வகிப்பதை பார்த்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் ஒப்படைக்கலாமா என்பதை யோசித்துக்கொள்ளலாம்.

(Deputy Speaker in the Chair.)

இன்றையதினம் இருக்கும் பஞ்சாயத்துக்களுக்குக் கூட சுயேச்சையான, யூனிட் ஆப் ஸெல்ப் கவர்ன்மெண்ட் என்ற கருத்துப் படும்படியாக இருந்தாலுங்கூட, அரசாங்கத்தினுடைய மான்யத்தை எதிர்பார்த்துத்தான் சில காரியங்களைச் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க முடியவில்லை. பஞ்சாயத்தின் நிதி நிலைமைகளை வளர்ப்பதற்கு வழிவகை செய்யலாம்.

பஞ்சாயத்து ஏரியாவில் இயங்கிவருகிற சந்தைகளை, பஞ்சாயத்துக்களிலேயோ பஞ்சாயத்து யூனியனிலேயோ ஒப்படைக்கும் அளவுக்கு அதிகாரம் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சில சந்தைகள் கோயில், தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகத்திற்காக சிற்சில இடங்களில் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட தர்ம காரியங்கள், நல்ல காரியங்களுக்கு ஒரு கெடுதல் வந்துவிடாத அளவுக்கு எந்த வகையில் பஞ்சாயத்துகளிலேயும் பஞ்சாயத்து யூனியனிடத்திலேயும் ஒப்படைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்து தக்க விதமாக ஒப்படைப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசுவதிலிருந்து ஏதோ கொஞ்சம் பயமாக இருப்பதுபோல் தெரிகிறது. இந்த மசோதா வருவதில் அவருக்கு கொஞ்சம் அதிருப்தி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

SRI V. SUBBIAH : உதவி சபாநாயகர் அவர்களே, சட்டசபை ஆரம்பிப்பதற்கு முன்னால் நமது கட்டிடத்தின் பேரில் இருக்கும் கொடி மரத்தைப் பார்த்தேன். அதில் நம்முடைய தேசத்தின் சின்னமாகிய தேசியக்கொடி இன்று காலையிலிருந்து பறக்கப்படவில்லை. அதற்குக் காரணம் உண்டா அந்தக்கொடி இல்லாமல், சபை நடவடிக்கைகள் நடப்பது பொருத்தம் உடையதா? அப்படிப் பறக்க விடப்படாததற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நம் சபையைப் பொறுத்தவரையில், நம்முடைய கட்டிடத்தின் மேல் கொடி கட்டப்பட்டிருக்கிறது. மற்ற கொடியைப்பற்றி நமக்கு அதிகாரமில்லை.

SRI M. S. SELVARAJAN : பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலோ நிறைவேற்றக்கூடிய தீர்மானங்கள் அல்லாது அவசியமான காரியங்களுக்கு எமர்ஜன்ஸி ப்ரொவிஷன்படி, அங்குள்ள கமிஷனர் "இன் ஆண்டிசிபிஷேன் ஆப் தி அப்ரூவல் ஆப் தி கவுன்சில்" சிற்சில காரியங்களைச் ஸாங்ஷன் செய்யலாம் என்று, சில வகைகளுக்குப் பணம் ஒதுக்கீடு செய்யலாம் என்று இருக்கிறது. அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அதிகாரம் சில காலத்திற்கு முன்பு ஜில்லா போர்டு தலைவர் வகித்து வந்த அதிகாரம் என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு நான் ஞாபகப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஜில்லா போர்டு தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அந்த அதிகாரம், இப்பொழுது கமிஷனருக்குக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக, பஞ்சாயத்து யூனியன்களின் தலைவராக அமையக்கூடியவர்களுக்கு அத்தகைய அதிகாரம் கொடுக்கப்படுவதில் தவறு என்ன என்பதை அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI T. P. ELUMALAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கிராமப் பஞ்சாயத்து மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். நம்முடைய நாட்டிலே ராம ராஜ்யம் அமைப்பதற்குப் பல படிகளை அமைக்கின்ற வகையில் இந்தச் சட்டங்களெல்லாம் நமக்குப் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

[Sri T. P. Elumalai] [23rd September 1958

நம்முடைய ராஜ்யத்திலே 11 ஜில்லா போர்டுகள் இருந்தன. அத்தனை ஜில்லா போர்டுகளிலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அதிக மாக தலைமைப் பதவியில் இருந்தார்கள். அப்படி இருப்பதன் காரணமாக ஓரளவு கட்சியினுடைய வளர்ச்சியைப் பாதுகாத்துக்கொள்வதற்கு முடியும். இருந்தாலும், நாட்டிலே இருக்கும் அத்தனை ஓட்டர்களுக்கும் நல்ல வாய்ப்பை இந்தச் சட்டம் அளிக்கப்போகிறது. சட்டத்தின் நுணுக்கங்களை மற்ற ஓட்டர்களும் தெரிந்துகொள்கிற அளவுக்கு, கடமை உணர்ச்சி அவர் களுக்கும் ஏற்படுவதற்காகத்தான், ஓரளவு கட்சி சுயநலம் இருந்தாலும், அதையெல்லாம் விட்டொழித்து, எல்லா மக்களுக்கும் நல்ல வாய்ப்பு களைக் கொடுக்கின்ற அளவில் ஏறக்குறைய இந்த ராஜ்யத்தில் 358 பஞ்சா யத்து யூனியன் கவுன்சில்களை அமைத்து, அவைகளின் பொறுப்புக்களை மக்களிடத்தில் ஒப்படைக்க இந்த மசோதா வழி செய்கின்றது.

குறிப்பாக நம்முடைய சட்டசபை கூடிய பிறகு நல்ல நல்ல சட்டங்களை எல்லாம் நாம் கொண்டுவந்திருக்கிறோம். அத்தனை சட்டங்களுக்கும் மக்களுக்குப் பயன்படவேண்டுமானால், கிராமப் பகுதிகளிலே அந்தச் சட்டங்கள் எப்படி அமுலில் நடக்கின்றன என்பதை எல்லோரும் கண் காணித்துக் கொள்ளவேண்டும். நாம் ராம ராஜ்யம் என்று சொல்கிற போது, அதற்காக பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் நல்ல அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால், பஞ்சாயத்து தேர்தல்கள் நடந்துகொண்டு வருகின்றன. எந்தக் கிராமத்திலேயும் சச்சரவு இல்லாது ஒரு பஞ்சாயத்தையும் நாம் அமைக்க முடியாத நிலைமை இன்றைக்கு கிராமத்தில் இருக்கிறது. அதிகமான சச்சரவுகளெல்லாம் கிராமத்தில் ஏற்படுகிறது. ராம ராஜ்யத்தை அமைக்கவேண்டுமென்று நினைக்கிறபோது, ராவண ராஜ்யம் அமைகின்ற முறையிலே பஞ்சாயத்து தேர்தல் ஒவ்வொரு கிராமத்திலே நடந்துகொண்டிருக்கிறது. இதற்கெல் லாம் சட்டம் என்ன செய்யும்? இது சட்டம் செய்ததினால் வந்த கோளாறு அல்ல; மந்திரி சபையின் மீதும் கோளாறு சொல்ல முடி யாது; ஒரு சில மக்கள் பக்குவப்படவில்லை என்றுதான் சொல்லவேண் டும். கட்சியிலே இருக்கின்றவர்கள் ஒரு சிலர் பக்குவப்படவில்லை என்ப தைத்தான் நாம் காணமுடிகிறது. ஆகையால், எந்த சட்டங்கள் நாம் செய்தாலும், சுமுகமான முறையில் அது நாட்டிலே நல்ல விதமாக பயனைக் கொடுப்பதற்காக எல்லோரும் ஒன்றுபட்டு நாம் உழைக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மந்திரி சபையினர் நல்ல முறையிலே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தேர்தல் இப்பொழுது நடந்துகொண்டி ருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் வரப்போகிறார்கள். அவர்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கவேண்டியது அவசியம். அவர்களுக்கு அதிகாரம் இல்லாதிருந்தால், எந்த வேலையும் அந்த கிராமத்தில் நடக்க முடியாது என்பது மந்திரி சபைக்கே நன்றாகத் தெரியும். கொஞ்சங் கொஞ்சமாக அதிகாரத்தை மக்களிடையே பரப்பவேண்டும். அதற்காக வேண்டி, கிராமந்தோறும் பஞ்சாயத்துக்களை அமைத்துவிட்டு, அவை களைச் சரியாக நடத்துவதற்கு ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலையும் ஏற்படுத்தி, அதற்கென கமிஷனர்களெல்லாம் நியமித்து கிராம அபிவிருத் திக்கு வழிகாட்டியாக இருக்கும் முறையில் பஞ்சாயத்துக்களையும் பஞ்சாயத்து யூனியன்களையும் அமைத்திருப்பதுபற்றி நான் பெருமைப்படு கிறேன். ஒரு கட்டிடம் கட்டுவதற்கு ப்ளானும், பணமும் அவசியம். அதை யெல்லாம் போட்டு, கட்டிடத்தையும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துவிட்ட பிறகு, அதைப் பார்க்க வருபவர்கள் ஏதோ ஒரு இடத்தில் ஜன்னல் வைத்தால் நன்றாக இருக்கும், காற்று வரும் என்று நோட்டம் பார்த்துச் சொல்லிவிடுவது சுலபம். ஆனால், முன்னாலே திட்டம்போட்டு சொல் வதற்கு வேண்டிய திறன் இருக்கவேண்டும். அந்தத் திறன் நமது மந்திரிசபைக்கு இருந்திருக்கிறது. இதை மற்ற கட்சியில் இருப்பவர்கள் கூட பாராட்டவேண்டியது அவசியம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதாவது ஒரு நல்ல சட்டம் கொண்டு வந்துவிட்டால் அதைக் கொண்டு வந்த அமைச்சரைத் தனியாகப் பாராட்டுகிறார்கள். கட்சியினால்

12-20 உ.ப.

23rd September 1958] [Sri T. P. Elumalai]

தான் அமைச்சர் இருக்கிறார். கட்சி அங்கத்தினர்களால்தான் அவர் உரம் பெறுகிறார். ஆகவே நல்ல சட்டம் கொண்டுவரும்போது தனிப்பட அமைச்சரைப் பாராட்டினாலும், அமைச்சர் அவையைப் பூராவாகப் பாராட்ட வேண்டும். அவரது கட்சியைப் பாராட்டவேண்டும். இங்கு மட்டிலும் அல்ல, பொதுமக்களிடத்தில் இவர்களது நல்ல எண்ணத்தையும், திறத்தையும் பாராட்டிப் பேசவேண்டும் என்று எல்லாக் கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சட்டசபை அங்கத்தினர்கள் பஞ்சாயத்து கவுன்ஸிலிலும் அங்கத்தினராக இருப்பதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும் அங்கே எங்களுக்கு ஓரளவு மதிப்பு இருக்கத் தக்க வகையில் சில உரிமைகள் எங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். பொதுவாக கல்யாண காலத்தில் நல்ல சீர் கொடுக்கவேண்டுமென்று பெண் வீட்டார் விரும்பலாம். ஆனால் பணத்தைச் சேகரித்துக்கொள்ளாத நிலைமையில் இருப்பவர்கள், கல்யாணச் செலவுக்கே என்ன செய்வது என்கிற நிலைமையில் உள்ளவர்கள் எப்படிச் சீர் கொடுப்பார்கள்? அப்படியே எங்களுக்கு எவ்வித உரிமையும், அதிகாரமும் இல்லாது, அந்தக் கவுன்ஸிலில் கலந்து கொள்கிறபோது அவர்களிடத்தில் இருந்து எங்களுக்கு மதிப்பும், கௌரவமும் உண்டாகும் என்று எப்படி நினைப்பது? அங்கே எங்களுக்கு வோட்டுரிமை இல்லாத காரணத்தினால் நல்ல வரவேற்பு இருக்காது. ஆகவே எங்களுக்கு சில உரிமைகளும், ஓட்டுரிமையும் கொடுக்கவேண்டும் தலைவராக இருக்கக் கூடாது என்று செய்தாலும் பரவாயில்லை கவுன்ஸிலுக்கு என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இதனுடைய நிர்வாகச் செலவைக் குறைக்கவும் வழி செய்யவேண்டும். முன்பு நமது ராஜ்யத்தில் 11 மாவட்ட போர்டுகள் இருந்தன. அவற்றை இப்போது எடுத்துவிட்டதன் காரணமாக 358 பஞ்சாயத்து கவுன்ஸில்கள் அமைய இருக்கின்றன. இதனால் முன்பு ஜில்லா போர்டுகளுக்கு ஆன செலவைவிட அதிகமாக நிர்வாகச் செலவு ஆகாதபடிக்கு கண்காணிப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தாழ்த்தப்பட்டவர்களும், தாய்மார்களுக்கும் இந்தக் கவுன்ஸிலுக்கு வருவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதை வரவேற்கிறேன். இந்த வாய்ப்புக் கொடுக்கவில்லையென்றால் அவர்களால் கவுன்ஸிலுக்கு வரமுடியாது. இப்போதே பஞ்சாயத்து கவுன்சிலின் தலைவராகவும், மெம்பர்களாகவும் வருவதற்குப் போட்டி போட ஆரம்பித்துவிட்டார்கள். முன்கூட்டியே வேலை மும்முரமாக நடந்து கொண்டிருக்கும்போது, ஹரிஜனங்களுக்கும், மாதர்களுக்கும் இந்த வாய்ப்பு இல்லாவிட்டால் அவர்களால் எப்படி வரமுடியும் என்பதாக நாங்கள் அச்சப்பட்டதுண்டு. அந்த அச்சத்திற்கு இடமில்லாமல் இந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கும் சர்க்காருக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேச்சை ஆரம்பிக்கும்போதும் முடிக்கும்போதும் திராவிடக் கட்சியின் சார்பிலே என்று சொல்லிக் கொள்வது வழக்கமாக இருக்கிறது. அது அவர்களது கட்சிக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளிக்கும் என்று நம்புகின்றார்கள். அப்படியே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கொண்டுவரப்படுகிற உயர்ந்த சட்டங்களைப் பாராட்டிப் பேசும்போது காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் கட்சியை சொல்வது கிடையாது. ஆனால் நல்லதொரு சட்டம் என்று பாராட்டும்போது, அதைக் கொண்டுவருகிற அமைச்சரையும், அந்த அமைச்சரவையையும், அவர்களுக்குப் பக்க பலமாக இருந்து அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குத் துணையாக இருக்கிற கட்சியையும் பாராட்டவேண்டும். மேலும் பொதுமக்களிடத்திலேயும் புகழவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். உதவி சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் பேசும்போது "கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்தால்

அது உருகும்போது பிடித்துக்கொள்ளலாம்" என்பதைப்போல சில சட்டங்கள் கொண்டுவருகின்றூர்கள் என்று சொன்னூர். அப்படி நாங்கள் செய்யவில்லை. கட்சி சுயநலம் இருந்திருந்தால், எங்கள் கட்சி கையில் இருந்த ஜில்லாபோர்டுகளை ஒழித்துவிட்டு, கிராமந்தோறும், 358 பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை, மனப்பூர்வமாக ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

SRI K. RAMACHANDRAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து சட்டத்தைப் பொறுத்த வரையிலும்—நமக்குப் பஞ்சாயத்து என்பது புதியதானது அல்ல. ஏற்கெனவே சரித்திர காலம் தொட்டே பஞ்சாயத்துகளினுலே நல்ல பலனைக் கொண்டிருக்கிறோம்—என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன் காலத்திலேயே ஆங்காங்கே பஞ்சாயத்துக்கள் அமைந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அன்றைய நிலையில் எப்படி அமைந்திருந்தன இன்றைய நிலையில் எப்படி கிராம பஞ்சாயத்துக்களை அமைக்கவேண்டியிருக்கிறது என்பதை நன்ருகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அன்றைய நிலையில் ஒவ்வொரு கிராமங்களுக்கும் என்ன என்ன தேவையோ, என்ன என்ன வழியில் செயல் பட்டால் கிராமங்கள் பலதுறைளிலும் முன்னேறுமோ அந்த அந்த வழியில் Trade, education, irrigation, agriculture, etc., செயல்பட்டிருக்கின்றன. அந்த மாதிரியான முறையில் அமைய வேண்டும் என்பதற்குத்தான் காந்திஜி அவர்கள் கூட ராம ராஜ்யம் என்பதைப்பற்றி சொல்லும்போது " It is complete a republic independent of its neighbours for its own vital wants " என்று ஒரு குறிப்பிலே சொல்கிருர். கிராமங்கள் சுதந்தரமாக யூனிட்டாக இருக்கவேண்டும். தன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள மற்றவர்களை எதிர்ப்பார்க்கக் கூடாது. பிறரை நம்பி வாழாத நிலைமையில் அடிப்படையில் அமைய வேண்டும் என்று சொல்கிருர். அப்படிப்பட்ட கிராம பஞ்சாயத்து யூனியன்களையே அமைக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதன் கருத்தே " self-governing," self-sufficient என்பது தான். இதைப்பற்றி அரசியல் அமைப்பில் ஆர்டிகிள்—40-லும் " The State shall take steps to organise village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-government." என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்தும் இன்றைக்கு இரண்டு வகையில் செயல்பட வேண்டிய நிலையில் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. முதலாவதாக கிராமத்தின் அடிப்படையான தேவையாகிய உணவை அதிகமாக உற்பத்தி செய்து கொள்வதற்கு திட்டங்களை வகுப்பது முதல் கடமையாக இருக்கவேண்டும். அடுத்து Social Functions ட்ரெய்னேஜ், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி முதலியவற்றைச் செய்து கொடுக்க வேண்டிய கடமை இருக்கிறது. இந்த இரண்டு கடமையிலும் முதல் கடமையாகக் கொள்ள வேண்டியது உணவு உற்பத்தியைத்தான். மக்களுடைய பொருளாதார வாழ்வை பாதிக்கும்படியாக விடாத வகையில் பல திட்டங்களைப் போடுவது தான். அந்த அடிப்படையை வைத்துக் கொண்டு இந்தப் பஞ்சாயத்து சட்டத்தைப் பார்த்தால் சிறிது ஏமாற்றம் அடையக் கூடிய நிலைமையில் தான் இருக்கிறோம். இது யாவரும் அறிந்த உண்மை. முன்னரே பேசியவர்களும் இதைப்பற்றிச் சொன்னூர்கள். அவ்வாறு அதிகாரத்தைக் கொடுப்பது என்றுல் மக்கள் இன்னும் அவ்வளவு பக்குவம் அடையவில்லை என்று சொல்லலாம். அது சரியான வாதம் ஆகாது. நாமே அவர்களால் அதைச் செய்ய முடியாது, இதைச் செய்ய முடியாது என்று அவநம்பிக்கை கொள்வது சரியல்ல. அது நம்முடைய ஜனநாயக வெற்றிக்கு உதவக் கூடியதல்ல. இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் சோஷியல் பங்ஷன் என்பதான இரண்டாவதான

கடமைக்கே முதலிடம் கொடுத்து பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கிறோம். **Decentralisation of Powers** என்கிற முறையில் அதிகாரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பது உண்மை. அந்த முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்று தான் நான் வருத்தத்துடன் சொல்லவேண்டியிருக்கிறது. அதிகாரங்கள் "டிஸென்ட்ரலைஸ்" பண்ணப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கும்போது, ஒரு "நெட்வொர்க் ஆப் ஆபீஸர்ஸ்" போன்ற ஏற்பாட்டிற்குத்தான் மசோதா வகை செய்கிறது என்று தெரிகிறது. அதாவது, ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் அதிகாரிகளைக்கொண்டு காரியங்களைச் செய்வதற்கான ஏற்பாடுதான் காணப்படுகிறது. சர்க்கார் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரிகளின் மூலம் தங்கள் பிடியை வைத்துக்கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அடித்தளத்தில், எக்ஸிக்யூடிவ் ஆபீஸரின் மூலமும், கமிஷனரின் மூலமும் பிடி வைத்துக் கொள்ள முடியும்; அதற்கு மேல், இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் மூலமும் கலெக்டரின் மூலமும் பிடி வைத்துக்கொள்ளமுடியும். மசோதாவின் 43-44-வது பிரிவுகளைப் பார்த்தால், பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டுகளுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் சேர்மன்களுக்கும் என்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியும். 1951-ம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் தான் இப்போதும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதாவது, பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சேர்மனுக்கும், சபையைக் கூட்டுவதற்கும் தீர்மானங்கள் போடுவதற்கும்தான் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குரிய அதிகாரங்கள் எக்ஸிக்யூடிவ் ஆபீஸருக்கும் கமிஷனருக்கும்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அம்சத்தைப் பொறுத்தவரையில், முந்தைய சட்டத்திற்கும் இந்த மசோதாவிற்கும் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. பஞ்சாயத்து சபைகளின் தீர்மானங்கள் எல்லாம் அமல் நடத்தப்படுமா என்பது குறித்தும் சந்தேகம் ஏற்படுகிறது. அவைகள் எல்லாம் நிச்சயமாக அமலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்வதற்கில்லை. தீர்மானம் சரியானதல்ல என்று இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் அபிப்பிராயப்பட்டால் அது ரத்து செய்யப்படலாம்—அது அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டியதில்லை—என்று 147-வது பிரிவு கூறுகிறது. ஆகவே, மசோதாவில் தீர்மானங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குரிய அதிகாரங்கள் எக்ஸிக்யூடிவ் ஆபீசர்களுக்கும் கமிஷனர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே யொழிய ப்ரெஸிடெண்டுகளுக்கும் சேர்மன்களுக்கும் கொடுக்கப்படவில்லை. மேலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்துக் கவுன்சில், அது விரும்பினால், சில சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தேசீய அபிவிருத்தி திட்ட வேலைகளை எடுத்து நடத்தலாம் என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், பஞ்சாயத்துக் கவுன்சில்தான் இந்த வேலைகளை எடுத்து நடத்தும் ஏஜென்ஸியாக இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவ் வேலைகளை சர்க்கார் கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலமே செய்ய வேண்டும். அதற்கேற்றவாறு மசோதாவில் விதிகளை வகுக்கவேண்டும். அத்திட்டங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலம் நிறைவேற்றப்பட்டால் தான் அத்திட்டங்களின் பயனை சாதாரண கிராம விவசாயி அடையமுடியும். இப்போது அதை சாதாரண கிராம விவசாயி அடைய முடிவதில்லை. ஏனென்றால், அத்திட்டங்கள் கிராம மக்களிடம் போய்ச் சேருவதற்கு அவை வெகு தூரம் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, கிராம அபிவிருத்தி திட்டங்கள் பஞ்சாயத்துக் கவுன்ஸில்கள் மூலம்தான் நடத்தப்படவேண்டும். அப்போதுதான், கொஞ்சநஞ்சமாவது அபிவிருத்தி திட்டங்களால் கிராம மக்கள் பயனடைய முடியும்.

10–30 a.m.

அடுத்தபடியாக, நான் ஏற்கனவே சொன்னதுபோல், இந்த மசோதாப்படி, அவசர காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கும்போது இந்த சபைகளில் தலைவர்களுடனோ உறுப்பினர்களுடனோ கலந்தாலோசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் கமிஷனர்களோ எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்களோ இல்லை; அவர்கள்

[Sri K. Ramachandran] [23rd September 1958

நடவடிக்கைகள் எடுத்துவிட்டு, பின்னர் அதை கவுன்சிலுக்குத் தெரிவித்தால் போதும். அவசர காலங்களிலும் சரி, மற்ற காலங்களிலும் சரி, எப்போதுமே. நடவடிக்கைகள் எடுப்பதற்கான அதிகாரம் ப்ரெஸிடெண்டுக்கும் சேர்மனுக்குமதான் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவர்களுடைய உத்தரவுகளேயும், அவர்கள் குறிப்பிடும் நடவடிக்கைகளேயும் நிறைவேற்றுபவர்களாகத்தான் எக்ஸிக்யூடிவ் ஆபீசரும் கமிஷ்ணரும் இருக்க வேண்டும். அவர்களுடைய காரியதரிசிகள் போலத்தான் எக்ஸிக்யூடிவ் ஆபீசரும் கமிஷ்ணரும் இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

வழக்குகளைத் தீர்த்துவைப்பதில் நமது நாட்டு கிராமம் பஞ்சாயத்துகள் ரொம்பவும் சேவை புரிந்திருக்கின்றன என்பதற்கான சரித்திர ஆதாரங்களை நாம் காண்கிறோம். இந்த மசோதாவில், வழக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான அதிகாரங்களும் அவைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. கிராமப் பஞ்சாயத்துக்களில் கோர்ட்டுகள் இல்லாவிட்டால், வழக்குகளில் சம்பந்தப்பட்ட கிராம மக்கள் நீதி பெறுவதற்காக வெகு தூரத்தில் இருக்கும் கோர்ட்டுகள் உள்ள இடங்களுக்கு பிராயாணம் செய்ய வேண்டியிருக்கும். இதன் காரணமாக அவர்கள் நீதி பெறுவதற்கு அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கும். அவர்களுக்கு குறைந்த செலவில் நீதி கிடைப்பதற்கு வகை செய்வதற்காக கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்துவதற்கு மசோதாவில் வகை செய்யவேண்டும். நான்கு-ஐந்து கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ஒரு கோர்ட் வீதமாவது பஞ்சாயத்துக் கோர்ட்களை ஏற்படுத்த வேண்டும்.

" லாண்ட் ரெவின்யூ "-வைப் பொறுத்தவறையிலும் தலைக்கு ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும் என்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அளவு போதாது. இந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும். மேலும் கம்மர்ஷியல் டாக்ஸையும் விவசாயி கொடுக்க வேண்டும். கல்வித் திட்டங்களுக்காக பஞ்சாயத்துகளுக்கு அதிகம் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது எல்லா பஞ்சாயத்துகளிலும் போதிய பள்ளிகளை ஏற்படுத்தி பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி அளிப்பதற்கு வகை செய்ய வேண்டும். " டார்கெட் " தேதியாகிய 1961-ம் வருட அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் எல்லா இடங்களிலும் ப்ளாக் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது இயற்றப்படும் சட்டம் ஒரு உருவம் (பார்ம்) தான் என்றும். இதில் உயிர் இல்லை என்றும், நான் ஏற்கனவே சொன்னதுபோல் உணவுப் பொருள் உற்பத்தி சம்பந்தப்பட்ட அதிகாரங்களை பஞ்சாயத்திடம் ஒப்படைத்தால்தான் சட்டத்திற்கு உயிர் வரும் என்றும் அதுவரையில் இது ஒரு உயிரில்லாத கூடாகத்தான் இருக்கும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Dr. (Srimathi) T. S. SOUNDARAM RAMACHANDRAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எல்லாக் கட்சிகளின் பிரமுகர்களின் ஆலோசனைகளையும் கேட்டுக்கொண்டு இந்த நல்ல மசோதாவை உருவாக்கி இதை இங்கே கொண்டுவந்திருக்கும் சர்க்காருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு நல்ல முறையில் சட்டங்களை இயற்றினாலும், பிறகு அவைகளை நல்ல முறையில் அமல் நடத்தவேண்டியது மிகவும் முக்கியம். ஜனநாயகப் பாதையில் சட்டம் செய்ய வேண்டும். அதில் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும் ஜனநாயகத்தை நோக்கியே சட்டம் செல்லவேண்டும். அப்படியில்லாவிட்டால் நிர்வாக அதிகாரிகள் மக்களிடையே பயத்துடன் பணியாற்ற வேண்டியிருக்கும். அதற்கு இடமில்லாத முறையில் விதிகளை வகுக்க வேண்டும். இப்போதுள்ள பஞ்சாயத்துக்கள் அமைப்பில், ஜனநாயகம் இல்லை. இயற்றப்படும் சட்டம் ஜனநாயகத்தை நோக்கிச் செல்லக்கூடிய முறையில், விதிகள் வகுக்கப்படாவிட்டால், புதிய பஞ்சாயத்துக்கள் அமைப்பில் ஜனநாயகம் இன்னும் குறைந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். அந்த அச்சத்திற்கு இடமில்லாத வகையில் விதிகள் வகுக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த மசோதா ஒரு லட்சிய மசோதா என்று நான்

23rd September 1958]
[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

சொல்ல மாட்டேன். ஆனால், இந்த மசோதாவைக் கொண்டுவந்ததன் மூலம் ஜனநாயகப் பாதையில் துணிச்சலாகச் செல்ல அடி எடுத்து வைக்கிறோம் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வேன்.

இந்த மசோதாவில், பெண்களுக்கும் ஹரிஜன மக்களுக்கும் பஞ்சாயத்து சபைகளில் பிரதிநிதித்துவம் அளிப்பது சம்பந்தப்பட்ட விதியைப்பற்றி ஒரு கனம் அங்கத்தினர் பேசினார், ஸ்திரீகள் முன்னேற்றத்தைப் பற்றி நாம் எவ்வளவுதான் பேசினாலும், ஸ்திரீகள் முன்னேற்றம் குறித்து சகோதரர்களுக்கு எதிர்ப்பு மனப்பான்மை இல்லாவிட்டாலும், இந்த மசோதாவைக் குறித்து விவாதிக்கும்போது பஞ்சாயத்து சபைகளில் பெண்களுக்கு 10 சத விகிதம் பிரதிநிதித்துவம் கொடுத்தால் போதுமா அல்லது 15 சத விகிதம் பிரதிநிதித்துவம் கொடுத்தால் போதுமா என்று ஆலோசனை செய்யும் நிலையில் சகோதரர்கள் இருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்கது. பெண்களுக்கு இந்த சபைகளில் 50 சத விகிதம் சரி பாதி—பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். அதற்கு சட்டத்தில் வகை செய்ய வேண்டாம். சமூகம் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். என் போன்றவர்கள் சட்டசபையிலோ பார்லிமெண்டிலோ மெம்பராக ஆவதுபற்றி கவலைப் படுவதில்லை. கிராமங்களில் ஸ்திரீகள் தங்கள் குடும்பங்களை கவனித்துக் கொள்வதுடன் கிராம நிர்வாகத்திலும் கட்டாயம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். கிராம நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள முன்வர வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன், தேர்தல் காலத்தில், ஸ்திரிகளுக்கு இந்த சபைகளில் சரிபாதி பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்யும் முறையில் சகோதரிகளுக்குப் பக்க பலமாக இருக்க வேண்டுமென்று சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மற்ற சபைகளில் இருந்து சமூகத்திற்கு ஸ்திரீகள் சேவைபுரிய வேண்டுமானால், அவர்கள் வீட்டை விட்டு வெளியே போகவேண்டியிருக்கிறது; அவர்கள் குடும்பத்தை கவனிக்க முடியாது. கிராமப் பஞ்சாயத்துக்களைப் பொருத்தவரையில். அவர்கள் தங்கள் குடும்பங்களை கவனித்துக் கொண்டே ஊர் நிர்வாகத்தில் பங்கு கொள்ள முடியும். எனவே கிராமப் பஞ்சாயத்துக்கள் தான் சமூக சேவைக்கு ஸ்திரீகளுக்கு மிகவும் ஏற்ற ஸ்தாபனங்கள். அவர்கள் இந்த சபைகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு சகோதர சமுதாயம் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்விக்காக கிராமப் பஞ்சாயத்துகளுக்கு கணிசமான தொகை ஒதுக்குவதற்கு மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. 11 வயது வரையிலுள்ள குழந்தைகளில் 98 சத விகிதத்தினருக்காவது கட்டாயக் கல்வி அளிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். 1961-ம் வருஷத்திற்குள் அத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அவ்வாறு செய்யும்போது, 40 சத விகித பெண்களுக்காவது கல்வி கிடைக்கச் செய்யவேண்டும். ஆகவே பெண் குழந்தைகள் அதிகமாக பள்ளிக்கூடங்களுக்கு வரச் செய்ய ஊக்கம் அளிக்க, "இன்ஸெண்டிவ்" அளிக்க, இந்தப் பணம் போதுமா, போதுமான முறையில் செய்யப்படுமா என்பதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிதிகள் ஒதுக்குகிற விஷயத்தில் அதிகம் பணம் கிடைக்க புது வரிகள் போடுவதில்லை, ராஜ்ய அளவிலே என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரி என்று சொன்னால் வேண்டாம் என்றும், சலுகைகள் என்று சொன்னால் வேண்டுமென்றும் சொல்லக் கூடிய முறையில்தான் ஜனங்களில் மனப்பான்மை இருக்கிறது. ஆனால் கிராமங்களில் வருவாயை எந்த முறைகளில் எல்லாம் பெருக்கிக் கொள்ளலாம், எப்படி தங்களுக்குத் தாங்களே தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம், அதாவது அவர்களின் "ரிசோர்ஸஸ்"-ஐ பெருக்கிக் கொள்ள திட்டமிடும் முறையில் பஞ்சாயத்துக்களை அமுல் நடத்தும்படி நிர்வாகிகள் பார்த்துக் கொள்ள வேண்டும். கிராம முன்னேற்றம் வரவேண்டுமானால் கிராமங்களில் எதிர்காலம் சமுதாய நலத் திட்டங்களைப் பொறுத்திருக்கிறது என்று சொல்கிறோம்.

10-40 a.m.

[23rd September 1958
[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

உண்மையில் நம்புகிறோம். அப்படியிருக்கும்போது, பஞ்சாயத்து கௌன்ஸில், பஞ்சாயத்துகளில் அனுமதியைப் பெற்றுத்தான் சமுதாய நலத் திட்டங்களை பஞ்சாயத்து கௌன்சிலிடம் ஒப்படைக்கலாம், "**may entrust**" என்று இருக்கிறது. அது, மாறவேண்டும். நாடு நலம் பெற வேண்டுமானால் பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து கவுன்சில்களுந்தான் கிராமங்களில் நடக்கக்கூடிய சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உத்திரவாதம் இருக்கவேண்டும். அவர்களின் அனுமதியின் பேரில் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அது கூடாது. பஞ்சாயத்துக்களின் தலைப்பொறுப் பாகத்தான், " நீர்பாசனத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், கால்நடை அபிவிருத்தி, கிராமக் கைத்தொழில்கள " போன்றவைகள் நூற்றுக்கு நூறு பஞ்சாயத்துக் கவுன்ஸில்களில் தலைச்சுவையாக, அவர்களின் முழுப் பொறுப்பாக இருக்கவேண்டும். அதற்கு, சர்க்கார் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். சர்க்காரே அந்தச் திட்டங்களை நடத்திக் கொண்டு போனால், அல்லது பஞ்சாயத்து ஏற்க முன் வருகிற திட்டங்களை அவர்களுக்கு கொடுத்து விட்டு மற்றவைகளை சர்க்கார் நடத்தினால் இரட்டை ஆட்சி மனப்பான்மைதான் ஏற்படும். தங்களின் பொறுப்புக்களை பஞ்சாயத்து கவுன்ஸில்கள் தட்டிக் கழிக்க முன்வரலாம். ஆகவே, சமுதாய நலத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்து கிராமச் சீரமைப்பிற்காக பாடு பட பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து கவுன்ஸில்களுக்கும் பரிபூர்ண உரிமை மட்டுமல்ல, அதை அவர்களின் கடமையாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து அட்மினிஸ்ட்ரேஷனில் இப்பொழுது அதிகமான பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து கௌன்ஸில்களும் இல்லை. அப்படியிருக்கும்போது பஞ்சாயத்து நிர்வாகத்தில் தவிர்க்கக் கூடிய தேக்கங்கள், அதிகம் இருக்கிறது என்று சட்டசபையிலும் வெளியிலும் அடிக்கடி புகார்கள் வந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது நாடு முழுவதும், பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து கவுன்ஸில்களும் அமையும்போது இப்படிப்பட்ட தேக்கங்கள் தவிர்க்கப் படாவிட்டால், தேக்கம் அதிகரித்துக் கொண்டே போனால் வேலைகள் நன்கு நடப்பதற்கு பதில் நிராசைதான் ஏற்படும். ஆகவே, அதற்கு வழி செய்து கொடுக்கவேண்டியது, தேக்கங்களை தவிர்க்க வழி செய்து கொடுக்க வேண்டியது. அரசாங்கத்தின் கடமையாகும். தேக்கத்தை எப்படி போக்கலாம் என்றால், ஸ்தலத்தில் வைத்தே சிக்கல்களைத் தீர்த்து தேக்கங்களை துரிதப் படுத்தலாம். நேற்று பிற்பகல் நடந்த கூட்டத்தில் கூட மைனர் பஞ்சாயத்து என்று சொல்கிற கிராம பஞ்சாயத்துகளில் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் வேண்டாம், பஞ்சாயத்து தலைவரே எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று துணிச்சலோடு அந்த அதிகாரத்தை கொடுக்கவேண்டுமென்று பலரும் சொன்னார்கள். நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நிதி நிர்வாகம் ஊழலாக நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தணிக்கை செய்து அந்த கணக்குகளை உடனுக்குடன் பஞ்சாயத்திற்கு அனுப்பி, தவறுகள், இருந்தால் அதை சரிப்படுத்தியமைக்க ஏற்பாடு செய்யாவிட்டால் ஜனநாயகத்தின் பேரில் குற்றம் சொல்ல காரணமேயில்லை. அதற்கு அரசாங்கமும் துணை புரிய வேண்டும்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

* SRI M. P. PERIASAMI : கனம் உதவி தலைவர் அவர்களே இந்த கிராம பஞ்சாயத்து மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். ஏனெனில், நீண்ட காலமாக வெள்ளையன் ஆட்சியில் ஜில்லா போர்ட், தாலுகா போர்ட், மேஜர் பஞ்சாயத்து என்றெல்லாம் பிரித்து வைத்திருந்தார்கள். அப்படி எதற்காக வைத்துக் கொண்டிருந்தார்கள் என்றால், பஞ்சாயத்துகளின் வரிகளை போட்டு அந்த ஊரில் சில காரியங்களை செய்து விட்டு மீதியை ஜில்லாக்களுக்கும், மாகாணத்திற்கும் கொண்டு வந்து செலவு செய்து விட்டு, மீதிப் பணத்தை வைத்துக் கொண்டு தேசத்திற்கு உதவி செய்து கொண்டு வந்தார்கள், வெள்ளையன் ஆட்சி வரையில். பிறகு காந்திஜி அவர்கள் கிராம சுயாட்சி வேண்டுமென்று

23rd September 1958] [Sri M. P. Periasami]

எண்ணினர். காங்கிரஸ் பிரமுகர்களும் மற்றவர்களும் அதற்கு உடந்தையாக இருந்தார்கள். முதலில் இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டுமென் சொன்னதின் அடிப்படையில், கிராமங்களுக்கும் சுதந்திரம் வேண்டுமென்று எண்ணி அரசாங்கம் இப்பொழுது கிராமப் பஞ்சாயத்து மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், மேஜர் பஞ்சாயத்துகளுக்கு முன்பு எவ்வளவு அதிகாரங்கள் இருந்ததோ அதை விட கூடுதலாக அதிகாரங்கள் இப்பொழுது கொடுக்கப் பட்டிருக்கிறது. மேஜர் பஞ்சாயத்து, மைனர் பஞ்சாயத்து, இவைகள் சில சில கிராமங்களில்தான் இருந்து கொண்டு வந்தது. சின்னச் சின்ன குக் கிராமங்களில் கூட இப்பொழுது அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அங்கு வசூலிக்கக் கூடிய பணத்தை கூடுமானவரையில் அக்கிராமங்களிலேயே செலவு செய்து விட்டு மீதிப் பணத்தை எந்த வழியில் செலவு செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசித்து செய்ய அரசாங்கம் ஒரு "பண்ட்" வைத்திருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள திட்டங்களுக்கும் பணம் போதாவிட்டால் அரசாங்கம் பணம் கொடுத்து உதவுகிறது. 1938, 1940, 1945-ம் வருடங்களில் கிராமங்களிற்குள்ளே நுழையவே முடியாது. இப்பொழுது, ரோடு வசதி, கிணறு வசதி, பாசன வசதி போன்றவைகள் செய்து தரப்படுகிறது. தண்ணீர் டாங்குகள் கட்டப்படுகிறது. சில இடங்களில் இன்னும் பஞ்சாயத்துகள் ஏற்படவே இல்லை. பஞ்சாயத்துகள் ஏற்படாத ஊர்களில், தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் முறையில் பிரசாரங்கள் செய்யப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்து வந்தால் வீட்டுவரியும் மற்ற வரிகளும் விதிப்பார்கள், ஆகவே, பஞ்சாயத்துகள் தேவையில்லை என்று பெரிய வீடுகள் கட்டியிருப்பவர்களும், பணக்காரர்களும் கிராமங்களில் இன்னும் பொது மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வரி அதிகமாகி விடுமே என்று பயந்து ஏழை எளியவர்களிடம் குடிசையில் வாழ்வோர்களுக்கும் வரி போடுவார்கள், ஆகவே, கிராமப் பஞ்சாயத்துகள் வேண்டியதில்லை என்று சில பணக்காரர்கள் இன்னும் சில கிராமங்களில் கூறிக் கொண்டு வருகிறார்கள். வேண்டாம் என்று மனுக்கள் அனுப்புகிறார்கள். பஞ்சாயத்து ஏற்படாத கிராமங்களில், ஐந்தாண்டுத்திட்டம் கீழ் செய்யப் படவேண்டியவேலைகள் ஒன்றுமே செய்யப்படவில்லை. ஐந்தாண்டுத்திட்டத்தில் பலன் ஒன்றும் பஞ்சாயத்து ஏற்படாத கிராமங்களுக்கு கிடைக்கவில்லை. கிராமப் பஞ்சாயத்து உள்ள இடங்களில் தண்ணீர் தொட்டிகள், பெரிய திட்டங்கள் இவைகளை எல்லாம் போட்டு அவர்கள் நன்மை அடைகிறார்கள். பஞ்சாயத்து இல்லாத இடங்களில் உள்ள பாமர மக்கள் அரசாங்கத்தைத்தான் குறை கூறி பிரசாரம் செய்து வருகிறார்கள்.

10-50 a.m.

எப்படி டௌன்களுக்கும், தாலூக்காக்களுக்கும் நன்மைகள் கிடைக்கிறதோ அதே மாதிரி கிராமங்களுக்கு எல்லாம் வசதி செய்யப்பட்டிருக்கின்றன. போக்குவரத்து வசதி, குடி தண்ணீர் வசதி, மற்றும் இது போன்ற வசதிகள் எல்லாம் மேலும் செய்து கொடுப்பதற்கு இந்த சமயத்தில் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து நாம் எல்லோரும். அதாவது எல்லா கட்சிகளும், எந்தவிதமான அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும், இந்த சட்டத்தை எல்லோரும் முழு மனதோடு ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி கொண்டு வந்தால் நம்முடைய கிராம மக்கள் நிரந்தரமாக நல்ல வாழ்க்கை நடத்த முடியும். அதல்லாமல் இந்த சட்டம் உளுத்துப்போன சட்டம், இதன் மூலம் எந்த விதமான பலமும் ஏற்படாது என்று நாம் சொல்லிக் கொண்டிருப்போமானால், நாம் சொல்லக்கூடிய வார்த்தைகளை நம்பி கிராம மக்கள் பாழடைந்து விடுவார்கள். ஆகவே இந்த பில்லில், பல குறைகளும் இருக்கலாம். இந்த சட்டம் நடைமுறைக்கு வருகின்ற சமயத்தில் பல குற்றங்கள் ஏற்படலாம். அவைகளை எல்லாம் அந்தந்த சமயத்தில் நிவர்த்தி செய்து கொள்ளலாம். தீண்டாமை சட்டம் கொண்டு வந்து 10, 15 வருடங்கள் ஆகியும்கூட அதில் பலவிதமான குறைகள் இருந்து வந்தன. பல சமயங்களில் அதற்கு பலனில்லாத வகையில் அந்த சட்டம் இருந்து வந்தது. அதற்கு பிறகு அவைகளை எல்லாம் வருஷத்திற்கு வருஷம் சட்டத்தை

தகுந்தவாறு திருத்திக்கொண்டு வந்தார்கள். இப்போது சொல்லப்படும் பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத் யூனியனிலும் பல குறைகள் வரலாம். அவை களை எல்லாம் காலாகாலத்தில் என்னென்ன குறைகள் ஏற்படுகின்றதோ அந்த குறைகளை எல்லாம் அந்த சமயத்தில் திருத்துவதற்கு அரசாங்கம் முன்னுக்கு வரும் என்று நாம் நம்பலாம். அதற்கு தகுந்த மாதிரி நாம் சட்டங்களை திருத்திக்கொள்ளலாம். பிறகு இந்த பஞ்சாயத் திருத்த மசோதா இன்று முக்கியமான அம்சமாக விளங்குகிறது. அதிலும் குறிப்பாக இப்போது இருக்கிற வாத்தியாயர்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்று சிலர் நினைக்கிறார்கள். பஞ்சாயத்தில் இருக்கின்ற வாத்தியார்களை அந்தந்த யூனியனுக்கு மாற்றி விடுகிறார்கள். அப்போது யார் அந்த யூனியன் பிரெசிடெண்டோ அவர்களுக்கு தகுந்த முறையில் நடக்காவிட்டால் இந்த வாத்தியாயர்களுக்கு என்ன நிலை ஏற்படுமோ என்று அவர்கள் பயப்படு கிறார்கள். ஆகவே இதற்கு அரசாங்கமும் தகுந்த முறையில் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் மாற்றப்படும் பொழுது இந்த வாத்தியாயர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாமல் இந்த விஷயத்தை அரசாங்கம் கவனித்து அதற்கு தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜில்லா போர்டு மெம்பர் கள் 40, 45 என்று இருந்தும் இப்போது நடக்கக்கூடிய ஜில்லா அட்வைஸரி கமிட்டியில் 70, 80 பேர்கள் கமிட்டி மெம்பர்களாக இருக்கிறார்கள். இந்த கமிட்டியில் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் வாக்குவாதம் நடைபெறும். மக்களுக்கு வேண்டிய காரியங்கள் ஒன்றும் அங்கு நடக்காது. வந்தவர்கள் எல்லாம் டி.எ.யும் வாங்கிக் கொண்டு போகக் கூடிய நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது தகுந்த முறையில் மக்க ளுடைய குறைகளை எல்லாம் எடுத்துக்கொள்வதற்கு அங்கு இடம் கிடைப்ப தில்லை. இந்த விஷயம் நம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். இதில் பஞ் ாயத்துகளில் கொஞ்சம் அதிகமாக செலவு ஏற்பட்டபோதிலும் அவர்களுக்கு தகுந்த முறையில் அதிகாரங்களை கொடுக்கவேண்டும். சிலர் பஞ்சாயத்து போர்டு தலைவர்களாகவும் வரலாம், ஜில்லா வாரியாக அமைக்கப்படுகிற போர்டுகளிலும் தலைவர்களாக வரலாம். இதில் சாதா ரணமாக சிலர் பணங்களை கையாடுகிறார்கள். இவ்விதமெல்லாம் இதில் வந்து சேருகின்றன. இதை கண்காணிப்பதற்கு எக்ஸிக்யூடிவ் அதிகாரிகளை போட்டு தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு இதற்கு தகுந்த முறையில் ஜாமீன் வாங்கி கொண்டுதான் இந்த மாதிரியான தலைவர் பதவிகளுக்கு பொறுப்பு கொடுக்கவேண்டும். அவ்விதமிருந்தால் பொது மக்களின் பணத்திற்கு சேதம் ஏற்படாது என்பதை தெரிவித்துக் கொண்டு இந்த பஞ்சாயத்து மசோதாவை எல்லாக் கட்சிக்காரர்களும் இந்த சமயத்தில் கிராம சுயராஜ்யம் கிடைப்பதற்கு இது வழியாகும் என்ற முறை யில் எல்லோரும் இதை ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM: சட்டமன்றத் துணை தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கும் இந்த பஞ்சாயத்து மசோதா வில் பஞ்சாயத்துகளைப்பற்றியும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களைப்பற்றி யும் அவைகளின் அமைப்பு முறைகளைப்பற்றியும் அவைகளின் அதிகாரங் களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துகளைப்பற்றிய சட்டம் ஏற்கெனவேயே இந்த மாநிலத்தில் இருந்து வருகிறது. பஞ்சா யத்து யூனியன் கவுன்ஸில் முறைகள் நம்முடைய மாநிலத்திற்கு மட்டு மல்லாமல் இந்தியா முழுமைக்கும் ஒரு பொது அமைப்பாக இருக்கவேண் டும் என்றுள்ள ஒரு கொள்கையின் அடிப்படையில் தான் இங்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை சபையிலுள்ள அங்கத்தினர்கள் அனைவரும் உணருவார்கள். கனம் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 198 பகுதிகள் கொண்ட இந்த பஞ்சாயத்து மசோதாவில் பெரும்பாலும் ஏற்கெனவேயுள்ள 1950-ம்வருஷத்திய பஞ்சாயத்து சட்டத்திலுள்ள விதி களும், 1920-ம் ஜில்லா போர்டு விதிகளும் தான் இதில் திருப்பி தரப்பட்டி ருக்கின்றன என்பதை நாம் பார்க்க முடிகிறது. இந்த இரண்டும் சேர்த்து ஒன்றாக கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர இதில் பெரியதோர் மாற்றம்

23rd September 1958] [Sri M. P. Subramaniam]

ஒன்றுமில்லை என்பது தான் என்னுடைய கருத்து. இந்த மசோதாவைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் பல அங்கத்தினர்கள் நம் தமிழகத்தில் இதன் மூலம் கிராம ராஜ்யம், அல்லது ராமராஜ்யம் ஏற்படும் என்றும், காந்தி கண்ட கனவு நனவாகும் என்றும் சொன்னார்கள். அந்த கனவு நனவாக வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் கிடையாது. ஆனால் இந்த மசோதாவினால் அந்த நிலை ஏற்படுமா என்பது தான் என்னுடைய ஐயம். கிராமராஜ்யத்தைப் பொறுத்தவரையில் இப்போதில்லை என்றாலும் கூட தமிழகத்தில் சோழர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் கிராமங்களில் அம்மாதிரியான ஒரு ஆட்சி நடந்து கொண்டிருந்தது என்பது வெறும் கதைகள் அல்ல, அதற்கு வரலாறுகளே இருக்கின்றன. கிராமத்தில் ஏற்படுகின்ற காரியங்களை எல்லாம் கவனித்துக்கொள்ளுகின்ற "ஐவர் வாரியம்" போன்ற பஞ்சாயத்துக்களில் மக்கள் இருந்து செயல்பட்டு வந்திருக்கின்றன என்பதற்கு நல்ல ஆதாரங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து மெம்பர் எல்லாம் ரகசிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதற்கும் தக்க சான்றுகள் இருக்கின்றன. அந்த நிலையை ஒட்டி இந்த மசோதாவில் பார்க்க முடியவில்லை. இதிலுள்ள விதிகளை எல்லாம் பார்த்தாலும் கூட பஞ்சாயத்துக்களுக்கு போதுமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதற்கு இதில் இடம் இல்லை என்றே தெரிகிறது. யூனிட்ஸ் ஆப் ஸெல்ப் கவர்ன்மெண்ட் என்ற முறையில் அவர்களுக்கு பயிற்சி ஏற்படும் வகையில் அவர்களை நம்பி பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இதில் பெரிய அளவில் இல்லை என்று சொல்லலாம். அமைச்சர் அவர்கள் கூறினதுபோல் இன்றைய தினம் ஜில்லா போர்டு—பஞ்சாயத்து அதிகாரங்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் என்ற அளவில் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுருக்கிறது. அவ்விதம் பிரிக்கப்பட்ட அதிகாரங்கள் எல்லாம் பரவலாக கொடுக்கப்படவில்லை. புதியதாக அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. அதிகாரங்கள் எல்லாம் பரவாலக இருக்க வேண்டும் என்று பல முறை இந்த சபையில் எல்லா தரப்பினர்களும் கூறிவந்திருக்கின்றனர். அவ்விதம் இருந்தும் இன்று பொது அதிகாரமே பரவலாக்கப்படவில்லை என்பதை நாம் உணருகிறோம். சென்னையில் இருக்கின்ற தலைமை அதிகாரங்கள் எல்லாம் பரவலாக கிராமத்திற்கு கொண்டு செல்லப்படவேண்டும். இந்த மசோதாவின் மூலம் ஒரு சில காரியங்களில் செயல்படுவதற்கு மாத்திரம் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, அதிகாரங்கள் எல்லாம் பரவலாக்கப்படவில்லை என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. ஜன நாயக முறையில் பொது ஜனங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்களை கொடுக்கவேண்டும் என்று ஒப்புக்கொண்ட பிறகு பஞ்சாயத் தலைவர்களின் கையில் அதிகாரங்களை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது என்று எனக்குப் புரியவில்லை. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர்கள் நல்ல முறையில் இந்த அதிகாரங்களை நிர்வகிக்க முடியாது, அதற்காகத்தான் நிர்வாக அதிகாரிகளை போட்டிருக்கிறோம். பஞ்சாயத் தலைவர்களால் இந்த அதிகாரங்களை கொண்டு நிர்வகிக்க முடியாது என்பதால் தான் அவர்களுக்கு இந்த அதிகாரங்களை கொடுப்பதற்கு தயக்கம் காட்டுகிறோம் என்று சொன்னார்கள். சாதாரணமாக கிராமத்தில் இருக்கின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களுக்கு இந்த அதிகாரங்களை கொண்டு நிர்வகிப்பதற்கு தகுதியும் நாணயமும் இல்லை என்றால், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த சட்டசபையில் வந்திருக்கும் நம் போன்றவர்களுக்கும், அமைச்சரவையில் இருக்கின்றவர்களுக்கு இந்த தகுதியும் நாணயமும் எப்படி பொருந்தும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம்மில் பலர் கிராமப்புறங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு வந்திருக்கிறோம். உண்மையிலே சொல்லப்போனால் நம்மைவிட நாணயமாகவும் முழு நேரமும் பொதுமக்களுக்காகவே வேலை செய்யக்கூடியவர்கள் கிராமப்புறங்களில் பலர் இருக்கின்றார்கள். இவர்களுக்கு முழு நேரம் தலைவர்களாக இருப்பதற்கு வாய்ப்பு இருக்காது என்று சொல்வது சரியல்ல. சில கிராமங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் அந்த கிராமத்தின் நலனுக்காகவே, அங்கு நடைபெறுகின்ற சண்டை, சச்சரவை எல்லாம் தீர்த்து வைத்துக்கொண்டு, முழு நேரமும் கிராம

[Sri M. P. Subramaniam] [23rd September 1958

மக்களின் நலனுக்காக உழைத்து வரக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆதலால் பஞ்சாயத்து தலைவர்களுக்கு எல்லா அதிகாரங்களும் கொடுக்கப் படுமானால் அவர்கள் இதில் முழு நேரத்தையும் செலுத்தி பொது வாழ்க்கையில் வேலை செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை சர்க்காருக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே பஞ்சாயத்து களுக்கு ஏற்கனவே இருந்து வந்த அதிகாரங்களையும் எடுத்து பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு கொடுத்திருக்கிறோம், அந்த அளவுக்கு பஞ்சா யத்துக்களுக்கு கூடுதலாக புதிய அதிகாரங்களை கொடுத்திருக்கிறோமா என் பதை பார்த்தால் அவ்விதம் ஒன்றுமில்லை என்றுதான் இந்த மசோதாவி லிருந்து சொல்ல முடியும். அடுத்தபடியாக இந்த பஞ்சாயத்துக்களைப் பற்றியும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அமைப்பு முறையைப் பற்றியும் ஏற்கனவே பஞ்சாயத்து மசோதா கொண்டுவந்த நேரத்தில் இந்த பஞ்சா யத்து தலைவர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பல முறை பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆனால், மக்கள் அந்த பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பதை மாற்றி விட்டு

11 a.m.

பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று செய்த பிறகு, தமிழ கத்தில் பார்த்தால், எல்லா கிராமங்களிலும் அங்கு இருக்கக்கூடிய பஞ் சாயத்து மெம்பர்களை அங்கிருந்து பாண்டிச்சேரி, புதுக்கோட்டை, பங்களூர் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று 1,000, 2,000 செலவு செய்து தலைவர் தேர்தலை வைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால், ஒவ்வொரு கிராமத்திலும் பலத்த போட்டி, சண்டை, சச்சரவுகள் ஏற்படும். கிராமப் புரங்களில் நிலையான நிர்வாகம் ஏற்படாது. அந்த நிலை மாறவேண்டும். ஆகையால் பழைய முறையை—பொது மக்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையை—கொண்டுவரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அமைப்பு முறையைப் பார்த்தால், எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்றிருக்கிறது. 500 மக்கள் தொகையைக் கொண்ட கிராமமாக இருந்தாலும் ஒரு பிரதிநிதியை அனுப்பவேண்டும், அல்லது 19,000 மக்கள் தொகையைக் கொண்ட ஒரு டவுன் பஞ்சாயத்தாக இருந்தா லும் ஒரு பிரதிநிதியைத்தான் அனுப்பவேண்டுமென்ற முறை இருக்கிறது. இது ஜனநாயக முறைக்கு உகந்ததாகாது. எல்லாப் பஞ்சாயத்துக்களும் பிரதிநிதிகளை அனுப்பலாம் என்றாலும் மக்கள் தொகை அடிப்படையில், பெரிய பஞ்சாயத்துக்கள் கூடுதலான நபர்களை அனுப்ப பஞ்சாயத்து மசோ தாவிலே, நல்ல முறையிலே விதிகளை மாற்றி அமைக்கவேண்டும். ஒவ் வொரு பஞ்சாயத்தும் ஒரு பிரதிநிதியை அனுப்பலாம் என்று வைத்து, அதே நேரத்தில் அதிகப்படியான ஜனத்தொகை இருக்கும் இடத்தி லிருந்து 2, 3 பிரதிநிதிகளை அனுப்ப வசதியளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்தில் இல்லாதவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாம் என்று இருப்பது மிக மிக மோசமானது. ஒரு நண்பர் கூறினார், பஞ்சாயத்து தேர்தலிலே தோற்று விட்டவர்களும், அல்லது பஞ்சாயத்து தேர்தலிலே நிற்காமல் இருந்தவர்களும் அங்கத்தினர்களா வதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் வரவேற்கிறேன் என்று சொன் னார். அவர் எந்த முறையிலே அதை வரவேற்கிறார் என்று புரியவில்லை. பஞ்சாயத்து மெம்பர்களில் ஒருவரை அனுப்பாமல், அங்கத்தினராக இல் லாத ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது நல்லதல்ல. இதை நிச்சயமாக மாற்றியமைக்கவேண்டும். அதே போல, தாழ்த்தப்பட்டவர் கள் சார்பாக, பெண்கள் சார்பாக மெம்பர்களாக கவுன்ஸிலில் யார் வேண்டு மானாலும் எடுத்துகொள்ளலாம் என்று இருப்பதைவிட பஞ்சாயத்தில் இருப்பவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அப்படி குறிப்பிட்ட எண்ணிக்கை பெண்கள் இல்லையென்றால் வெளியிலிருந்து பெண் மெம்பர்களைச் சேர்த் துக்கொள்ளலாம். ஏற்கெனவே உள்ளவர்களை விட்டு விட்டு மற்றவர்களை நேரடியாகக் கொண்டுவரலாம் என்று சொல்வது சரியல்ல.

மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்களும், கமிஷனர்களும் அவர் களுக்குக் கீழே வேலை செய்யவேண்டுமென்று பலர் வலியுறுத்திக் கூறினார்

கள். இதைப்பற்றி நேற்று மாலை பேசிய நேரத்தில் அமைச்சர் அவர்கள், செக்ரட்டரி என்று மாற்றி விட்டால் காரியங்கள் நன்றாக ஆகிவிடாது, 7,000 கிராமங்களில் பஞ்சாயத்து தலைவர்களே நிர்வாக அதிகாரியாகவும், 300 கிராமங்களில் மட்டும் எக்ஸிக்யூடிவ் அதிகாரிகள் இருப்பார்கள் என்றும் சொன்னார்கள். 7,000 கிராமங்களில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அத்தனை பொறுப்பு எடுத்துக்கொண்டு நடத்துவார்கள் என்று அரசாங்கம் கருதும்போது, 300 பெரிய பஞ்சாயத்துக்களில் மட்டும்—படித்தவர்களும், தகுதியுள்ளவர்களும் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கும்படியான இடத்தில் மட்டும்—அவர்களிடத்திலே அதிகாரத்தை ஒப்படைக்காமல், அவர்களுக்குத் தகுதியில்லை என்று அதிகாரத்தை எக்ஸிக்யூடிவ் அதிகாரிகளிடம் ஒப்படைப்பது உகந்ததல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

கடைசியாக தேசீய அபிவிருத்தி வேலைகளை இதன் மூலமாகச் செய்ய வேண்டுமென்ற விதி முறை கட்டாயமாக இல்லை. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு நிர்வாக அதிகாரியாக இருந்தாலும், தேசீய விஸ்தரிப்பு திட்டத்தில், கட்டம் 1, கட்டம் 2 என்று 15 லட்ச ரூபாய் செலவழிப்பதை, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் மூலமாகச் செய்யவேண்டுமென்று இல்லை. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர் கமிஷனராக இருக்கிறார். ஆகையால், லோகல் டெவலப்மெண்ட் ஒர்க்ஸ், சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்பு திட்டம் இவை யாவையும் செயல்படுத்தக் கூடிய அதிகாரம் பஞ்சாயத்து யூனியனுக்கு இருக்க வேண்டும். அந்த வகையில் இவைகளை மாற்றி அமைக்கவேண்டும்.

இந்த மசோதா 198 பிரிவுகளைக் கொண்டுள்ளது, அதிலே பல உட்பிரிவுகள் வேறு. இதை 4 நாட்களிலே விவாதிக்கவேண்டுமென்று சொல்வது உகந்ததல்ல. இந்த மசோதாவிற்கு ஏறக்குறைய 400 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன பல அங்கத்தினர்களால். இவைகளையெல்லாம் யோசித்து முடிவு செய்ய இதற்கான காலத்தை நீட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கக்கூடிய, பஞ்சாயத்து மசோதாவை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இப்போது வந்திருக்கக் கூடிய மசோதாவின் அடிப்படை நோக்கம், ஏதோ ஸ்தல ஸ்தாபனங்கள் என்ற முறையிலே ஸ்தல நிர்வாகங்கள் இன்றைய தினம் நாட்டிலே இருந்து வருகின்றன என்றாலும், இவைகளை மாற்றி உண்மையிலேயே ஸ்தல சர்க்கார்களாக மாற்றியமைக்கவேண்டுமென்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய ஒரு சில அன்பர்கள் பேச்சு அளவுக்கு—பிறர் சொல்லும் அளவுக்கு—ஸ்தல சர்க்கார்களாக அமையும் என்று சொல்கிறார்களே தவிர, இந்த மசோதாவிலுள்ள பிரிவுகளைப் பார்க்கும்போது, ஏற்கெனவே உள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இதற்கும் எந்த விதமான வித்தியாசமும் இருக்கப் போவதில்லை என்று பேசினார்கள். இதைக் கேட்டபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், இதிலுள்ள பிரிவுகளை ஒவ்வொன்றாகப் பார்த்தால், உள்ளபடியே எப்படி இன்றைய தினம் இங்கிலாந்து நாட்டிலே லோகல் கவர்ன்மெண்ட் 1933-லிருந்து இருந்து வருகிறதோ, அதே முறையிலே இந்தச் சட்டம் தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கொள்கையில் ஒரு பெரிய மாறுதல் செய்ய முற்படும்போது ஒரு அளவுக்கு சற்று ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. இருந்தாலும், கொள்கை அடிப்படையில், இப்போது இருக்கக் கூடிய முறையை மாற்றி வேறு முறையைக் கையாள வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதே போல மெம்பர்களைப் பொறுத்த வரையில், கல்வியைப் பொறுத்ததாக இருந்தாலும், ஸ்தல நிர்வாகத்தைப் பொறுத்ததாக இருந்தாலும், இது போன்ற கொள்கையைப் பற்றிய சட்டங்களைக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் உள்ளபடியே ஒரு தடவை அல்ல, பல தடவைகள் நன்றாக ஆலோசனை செய்து கொண்டுவர வேண்டும் என்பது

